
# திராவிடன்

தி.மு.க. வார இதழ்

ஆசிரியர்: என்.வி.நடராசன்

# அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரிக்கு அறிஞர் அண்ணாவின் பதில்!



**அண்மையில் ஐதராபாத்தில், இந்திய உள்துறை அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி, இந்தி எதிர்ப்பு போராட்டத்தை தி. மு. கழகம் கைவிட வேண்டுமென்றும் சீன ஆக்ரமிப்பு நெருக்கடியான இச்சமயத்தில் இவ்வித போராட்டம் நடத்துவது தேசத் துரோகமென்றும் பேசிய பேச்சுக்கு, கழகத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் விடுத்துள்ள அறிக்கை:**

ஆளுங்கட்சியின் இதயத்தில் இரத்தப் பசி கொண்ட ஓநாய் குடியிருக்கிறது. அதன் பசி அடங்குவதற்கு எவ்வளவு இரத்தம் வேண்டுமானாலும் தருவதற்குத் தி. மு. கழகம் தயாராக இருக்கிறது. எங்களுடைய இரத்தத்தைச் சுவைத்த பிறகாவது அதன் வெறி அடங்கி ஓடி விடுமா என்பதைப் பரிசோதித்துப் பார்க்கும் விதத்திலேயே தி. மு. கழகத்தின் கிளர்ச்சி இருக்கும்.

இன்னல்களை ஏற்றுக் கொள்வோம்; எல்லாத் தியாகங்களையும் புரிவோம். இது காந்தீய முறை. இந்த முறை அச்சுறுத்தலுக்கு அடிபணியாது, அது போலவே சபலத்திற்கு இரையாகி விடாது. எவ்வளவு இன்னல்கள் ஏற்பட்டாலும் அதைத் தாங்கி நிற்கும் சக்தி தி. மு. கழகத்திற்கு உண்டு. அதில் எனக்குப் பெருத்த நம்பிக்கை உண்டு.

ஏனெனில் கொடுங்கோன்மைக்கும் அநீதிக்கும் அடிபணியவோ ஒத்துப்போகவோ கழக வீரர் எவரும் தயாராக இருக்க மாட்டார்; அநீதியைச் சகிப்பதில்லை என்பது எங்களுடைய தாரக மந்திரமாகும்.

இந்திய உள்நாட்டமைச்சர் திரு. லால்பகதூர் சாஸ்திரியின் ஐதராபாத் பேச்சை நான் மிகவும் கவனமாகப் படித்தேன். அதில் புதிதான—உருப்படியான கருத்துக்கள் ஏதேனும் உள்ளனவா என்பதைக் கண்டுபிடிக்க முயன்றேன்; ஆனால் பெருந் தலைவர் ஒருவர் பேசிய பேச்சு என்பதைத் தவிர, அவரது பேச்சில் புதுமை எதுவுமில்லாமலிருப்பது கண்டு வருத்தமடைகிறேன்.

திரு. சாஸ்திரி டில்லியிலிருந்து தென்னாட்டிலுள்ள ஐதராபாத்துக்கு உல்லாசப் பயணம் வந்துள்ள போதிலும், அவரது பேச்சின் தொனியும் தன்மையும் சிறிதும் மாறாமல் 'டில்லியின் போக்கிலேயே இருக்கிறது; அந்தப் பேச்சில் 'லால்பகதூர் பாணி' இங்கும் அங்கும் தென்படுவது உண்மைதான்; என்றாலும், கொள்கை மாறவில்லை.

அதுமட்டுமின்றி, இந்தக் கொள்கை நியாயமானது என மெய்ப்பிப்பதற்கு அவர் கூறிய வாதங்களும் தெளிவற்றனவாகவும், சொத்தையானவையாகவும் இருக்கின்றன.

இந்தி எதிர்ப்புப் போராட்டத் திட்டத்தைக் கைவிடும்படி திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு திரு. சாஸ்திரி 'வேண்டுகோள்' விடுத்திருக்கிறார்.

அமைச்சரின் 'வேண்டுகோள்' கனிவான சொற்களாக இருந்தாலும், அதில் மிரட்டலும், அச்சுறுத்தலும் கலந்திருக்கின்றன. சட்டத்தையும் அரசியல் சட்டத்தையும் சுட்டிக்காட்டி அவர் பயமுறுத்தி இருக்கிறார். தி. மு. கரிகத்தின் இந்தி எதிர்ப்புப் போராட்டத் திட்டம் சிறு பிள்ளைகளின் விளையாட்டு அல்ல. நிலைமைகளையெல்லாம் ஆழ்ந்து ஆராய்ந்து, விளைவுகளையும் முழுவதும் ஓர்ந்து இறுதியாக எடுக்கப்பட்ட முடிவே இந்தி எதிர்ப்புப் போராட்டமாகும்.

இந்திய மேலவையில் நான் எந்த உணர்ச்சியோடு பேசினேனோ, அதிலிருந்து சிறிதும் மாறப்போவதில்லை என்பதை இந்தச் சமயத்தில் நான் திரு. சாஸ்திரிக்கு உறுதியாகக் கூற விரும்புகிறேன்.

திரு. சாஸ்திரி சார்ந்திருக்கும் கட்சிக்குப் புதிய 'கூட்டாளி'களாகச் சேர்ந்திருக்கும் வேறு சில கட்சிகளைப் போல் நாட்டின் பாதுகாப்பைச் சீர்குலைக்கும் முயற்சிகளில் தி. மு. கழகம் ஒரு போதும் ஈடுபடாது.

(2-ம் பக்கம் பார்க்க)

## "திராவிடன்" வாசகர்களுக்கு

—0—0—

வணக்கம்.

'திராவிடன்' அலுவலக மாற்ற அமைப்பின் காரணமாக இவ்வாரமும் சற்று தாமதமாக 8-பக்கங்களுடன் வெளிவருவது குறித்து பொருத்தருள வேண்டுகிறோம். அடுத்த வாரத்திலிருந்து அதிக பக்கங்களுடன், ஆசிரியர் என். வி. என். தரும் 'அண்ணாவுடன் நான்' தொடர் கட்டுரையும் வெளிவரும்.

நிர்வாகி: 'திராவிடன்'

16, இப்ராகீம் சேட் தெரு, சென்னை-1.

பீகிங்கின் பேராசைப் போக்கை முறியடிக்க நாம் இணைந்து போராடுவோம்; இதை நான் வலியுறுத்தத் தேவையில்லை; ஏனெனில், இதில் நம்மைப்பற்றி ஐயுற இடமே இல்லை.

அரசினர் இழைக்கும் அநீதிகளுக்கெல்லாம், வெளிநாட்டு அபாயத்தைத் துணைக்கு அழைப்பது என்பது நல்ல அரசியலும் அல்ல—அறநெறிக்குப் பொருத்தமானதும் ஆகாது.

தமிழக அரசுக்கோ, இந்திய அரசுக்கோ தொல்லை கொடுக்க வேண்டும் என்பதற்காக இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை தி. மு. கழகம் தொடங்கவில்லை. மத்திய ஆட்சிமொழி அரியணையில் இந்தியை அமர்த்துவதன் மூலமாகப் பாதிக்கப்படவிருக்கும் கோடிக்கணக்கான மக்களின் மன வேதனையையும் உள்ளக் குமுறலையும் ஆட்சியாளர்களுக்கு உணர்த்துவதற்காகவே இந்தப் போராட்டத்தை நடத்தவிருக்கிறோம்.

இந்தி பேசாத பகுதி மக்களுக்குப் பாதகம் ஏதும் ஏற்படாத வகையில், ஆங்கிலத்தை அகற்றிவிட்டு இந்தியை ஆட்சி மொழியாக்கப் போவதாக திரு. சாஸ்திரி கூறி இருக்கிறார்.

நாட்டிலுள்ள ஒரு பிரிவினரின் தாய் மொழி ஆட்சி மொழியாகிவிட்டால், மற்ற மொழியினருக்கு நிரந்தரமான பாதகம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும். அது இந்தியாக இருந்தாலும் சிந்தியாக இருந்தாலும் இந்தப் பாதகம் ஏற்படுவது உறுதி.

கனிவான சொற்களால் அவ்வப்போது உறுதிமொழிகள் அளித்துவிடுவதால் மட்டும் இந்தப் பாதகத்தைப் போக்கிவிட முடியாது.

ஆங்கிலம் ஆட்சிமொழியாக நீடித்தால், அதனால் ஏற்படும் நன்மைகளும் தீமைகளும் நாடு முழுவதும் பரவலாக இருக்கும். ஆனால், இந்தி ஆட்சிமொழியானால், இந்தி பேசாத பகுதி மக்கள் அனைவருக்கும் நிரந்தரமான தீமை ஏற்படும். இந்தி பேசும் பகுதியினர் ஆதிக்கம் செலுத்துவோராக மாறுவர். இது அநீதியாகும். தென்னாட்டவரையே காங்கிரசுத் தலைவர்களாக்குவதன் மூலம் இந்த அநீதியை தீங்கற்றதாக்கிவிட முடியாது.

இந்தியாவின் ஒரு பகுதியினர் ஆதிக்க பலம் பெறும் அநீதியையும் ஆபத்தையும் தவிர்க்கவேண்டும் என்ற நோக்கத்துடனேயே ஆங்கிலம் மட்டும் இந்திய அரசின் ஆட்சிமொழியாக நீடிக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்; தாய் மொழிப்பற்று இன்மையால்தான் நாங்கள் இவ்விதம் கூறுகிறோம் என்று கூறுவது தவறாகும். தேசியத் தன்மான உணர்ச்சி இல்லாதோர்தான் இந்தி ஆட்சிமொழியாவதை எதிர்க்கின்றனர் என்று கூறப்படும் குற்றச்சாட்டு சிறிதும் ஆதாரமற்றதாகும்.

இந்தியாவின் தேசிய மொழிகள் அனைத்தையும் மத்திய ஆட்சிமொழிகளாக்க வேண்டும் என தி. மு. கழகம் வலியுறுத்துகிறது. இதற்கு திரு. சாஸ்திரி சங்கடப்படுகிறார்.

இந்தியை மட்டும் ஆட்சிமொழியாக்குவது என்பது கொடுங்கோன்மையாகும். என்ன விளைவுகள் ஏற்பட்டாலும், இந்தக் கொடுமையை எதிர்த்துப் போராடியே தீரவேண்டும்.

மக்கள் சபையில் பெண் உறுப்பினர் ஒருவர் கூறியதை இந்த நேரத்தில் திரு. சாஸ்திரிக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்தித் தேர்வில் தேர்ச்சி பெறாத காரணத்தால் தமது கணவருக்குப் பதவி உயர்வு கிடைக்கவில்லை என அந்தப் பெண் உறுப்பினர் மக்கள்சபையில் கூறினார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கு திரு. சாஸ்திரி பாராளுமன்றத்தில் ஏன் பதிலளிக்கவில்லை? அந்தப் பெண் உறுப்பினர் கூறியதைக் கவனித்ததாகவே அமைச்சர் அப்போது காட்டிக்கொள்ளாமலிருந்துவிட்டார்.

இந்தி பேசாத மக்களுக்கு எந்த விதமான தடங்கலோ, வசதிக் குறைவோ ஏற்படாது என்று வெறும் உறுதிமொழிகளை கொடுத்துவிட்டால் போதாது. அந்த உறுதிமொழிகளை அரசால் நிறைவேற்ற முடியாது.

இந்தியை மட்டுமே ஆட்சிமொழியாக்கிவிட்டால், பிறகு இந்தி பேசாத மக்களுக்குத் தீங்கு ஏற்பட்டே தீரும்; அதுவும் நிரந்தரமாக; அதை எந்தக் காலத்திலும் எந்த வகையிலும் போக்கவே முடியாது.

ஆகவே, இன்றையச் சூழ்நிலையில் நியாயமான கொள்கை ஒன்றே ஒன்றுதான் இருக்கமுடியும்; அதாவது, இப்பொழுதைப் போலவே ஆங்கிலம் மட்டும் ஆட்சி மொழியாகச் சிறிது காலம் நீடிக்கச் செய்ய வேண்டும்; இதற்கிடையே இந்தியாவின் 14 தேசிய மொழிகளையும் மத்திய ஆட்சி மொழியாக்குவதற்கான திட்டம் ஒன்றைச் சீராக வகுத்துக் கொள்ளவேண்டும். அப்படி வகுப்பதில் எவ்வளவு சங்கடங்கள் இருந்தாலும் சரி அதைத்தான் செய்யவேண்டும். அதைவிட வேறு வழியில்லை.

அதே விழாவில் பேசிய திரு. சஞ்சீவி(ரெட்டி)யார் உருக்கமான வேண்டுகோள் ஒன்றை திரு. சாஸ்திரிக்கு விடுத்திருக்கிறார்; 'இந்தி பேசாத வட்டார மக்களின் கோரிக்கைகளை இந்திய அரசு பரிவுடனும், கனிவுடனும் அணுகவேண்டும்' என்று அவர் முறையிட்டபோதிலுங்கூட, தமது இந்திக் கொள்கையை விட்டுவிட சாஸ்திரி தயாராக இல்லை.

திரு. சாஸ்திரியின் பேச்சு ஓர் உண்மையைப் புலப்படுத்திவிட்டது. இந்தி பேசாத மக்களின் கோரிக்கைகளுக்குப் பரிவு காட்ட மேலிடத்திலிருப்பவர்கள் தயாராயில்லை. அது மட்டுமல்ல; இந்திக் கொள்கையை மூர்க்கமாக நிறைவேற்றுவதிலேயே குறியாக இருக்கிறார்கள் என்பதுதான் அந்த உண்மை.

இந்தித் திணிப்புக் கொள்கை அறிவீனமானது. இதை விடாப்பிடியாகக் கடைபிடித்து வருவோரின் இதயத்தைத் தொடவேண்டும் என்பதே தி. மு. க. போராட்டத்தின் நோக்கமாகும்."

○

5-ம் பக்கத் தொடர்ச்சி

நன்கு புலனாகும்! அதை ஒரு கட்டுரையில் அல்ல! ஒரு தொடர் கட்டுரையில் கூட முழுமைபடுத்த முடியாகி.

முதன் முதலில் பெரியாரிடமிருந்து, பிரிந்து வரும்போது அலட்சியப்படுத்தப்பட்ட நிலையிலிருந்து, இன்றைய நிலைவரை சீர்தூக்கிப் பார்த்தால் அகில உலக, அரசியல் வரலாற்றிலேயே எந்த ஒரு இயக்கமும் இத்தகைய வளர்ச்சியையும், மக்கள் ஆதரவையும், இவ்வளவு விரைவில் அடையவில்லை என்பதை வரலாறு அறிந்தோர் உணர முடியும்.

எனவே காலத்தின் வளர்ச்சியில் தி. மு. க. பெற்ற திருச்செங்கோடு வெற்றியும், திருவண்ணாமலை வெற்றியும் வரலாற்று சிறப்புடையது என்பதை 'குமுதமே' நீ உணராவிட்டாலும் நாளை என்று வரும் காலமும் வரலாறும் உணர்த்தும். நாளையாவது நீர் உணரத்தான் செய்வீர்! அந்த நாள் வெகு தொலைவில் இல்லை! அண்மையிலே இருக்கிறது என்பதை மெத்த மகிழ்ச்சியோடு மேதினிக்கு அறிவித்துக் கொள்கிறோம்!

வீழ்க அறியாமை!

வெல்க 'நாளை நமதே' என் தத்துவம்!

○

## குறட் பேரவை

---(0)---

குறட் பேரவை நடத்திய கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றோர் பட்டியல்:

முதற் பரிசு:
தி. மு. ஞானப்பூங்கோதை (மகளிர் கிருத்துவக் கல்லூரி)

இரண்டாம் பரிசு:
இரா. சந்தானகிருட்டினன் (பச்சையப்பன் கல்லூரி)

மூன்றும் பரிசு:
இந்திரா சிவராம் (ஸ்தெல்லா மேரி கல்லூரி)

நான்காம் பரிசு:
எஸ். விஜயலட்சுமி (ஸ்தெல்லா மேரி கல்லூரி)

இதற்கான பரிசளிப்பு விழா 3—8—63 சனிக்கிழமை மாலை 4-30 மணியளவில் டாக்டர் குருசாமி முதலியார் டி.டி.வி. உயர்நிலைப்பள்ளி பெருமண்டபத்தில் நடைபெறும்.

புலவர் அன்பு கணபதி அவர்கள் தலைமையில்

**நாவலர் நெடுஞ்செழியன்** எம். ஏ. எம். எல். ஏ.
அவர்கள் பரிசளிப்பார்.

**பேராசிரியர் க. அறிவழகன்** எம். ஏ.
**திருமதி. கமலாட்சி**
ஆகியோர் பேசுவர்.

# தலையங்கம்

மலர். 16. 27—7—63 மாலை 49

## புறப்படுவீர்!

——(00)——

[ என். வி. என். ]

திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும், கழகம் அவ்வப்போது எடுக்கும் முடிவுகளையொட்டியும் நமது அண்ணு அவர்கள் வழங்கிவரும் அரிய ஆலோசனை—அன்புக் கட்டளைகள் ஆகியவைகளுக்கேற்பவும் பணியாற்றி வந்திருக்கிருர்கள் என்பதற்கு கழகம் அன்றிலிருந்து இன்றுவரை பெற்றுள்ள படிப்படியான வளர்ச்சியே எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

அரசினர் செய்யும் அநீதிகளை எதிர்த்துக் கழகம் நடத்திய அறப்போராட்டங்கள், பொதுத் தேர்தல்கள், கழக வளர்ச்சிக்கான ஆக்கப்பணிகள், பொதுமக்களின் அன்ருட பிரச்சினைகள், கழகத்தின் அடிப்படைக் கொள்கை ஆக அனைத்திலும் கழக முன்னணி வீரர்களும் நாடெங்குமுள்ள கழக நிர்வாகிகளும், அவரவர்களின் சக்திக்கும் நிலைமைக்கும் ஏற்றவாறு தொண்டாற்றி வருகிருர்கள் என்பதை மாற்ருரும் ஒப்புக்கொள்வர்.

அதிலும் சிறப்பாக 1962ல் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகு, கழகம் மேற்கொண்ட விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்திலும் தொடர்ந்து திருச்செங்கோடு பாராளுமன்ற இடைத்தேர்தலிலும், அண்மையில் நடைபெற்ற திருவண்ணுமலை சட்டமன்ற இடைத் தேர்தலிலும் கழகத் தோழர்கள் ஆற்றிய அரும்பணி மேற்கொண்ட கூட்டு முயற்சி காட்டிய ...ப்பாடு, கடமை உணர்ச்சி ஆகியவைகள் கழகத் ...வலிவையும், பொலிவையும், எல்லாவற்றிற்கும் மேலாக ... தலைமையின் தூய பெருமையையும் அரசியல் உலகம் ...கு அறியச் செய்திருக்கிறது.

...திருச்செங்கோடு பாராளுமன்ற இடைத் தேர்தலிலும், ...வண்ணுமலை சட்டமன்ற இடைத்தேர்தலிலும் பெற்ற வெற்றி ...ன வாயிலாகக் கழகத்திற்கு, வரலாற்றில் அழிக்க முடியாத சிறப்பிடம் கிடைத்திருக்கிறதென்று கூறின் மிகையாகாது.

இத்தேர்தல்களில் ஈடுபட்ட ஒவ்வொரு கழகத் தோழரின் தொண்டும் ஒவ்வொரு வகையில் விலைமதிக்க முடியாத பொக்கிஷமாக அமைந்திருந்தது என்பதை ஆளுங்கட்சியினர் கூட மனதார ஏற்றுக்கொள்வர். கழகத் தோழர்களிடம் காணப்பட்ட இந்தக் கூட்டு முயற்சியும் பொறுப்பு மிக்க பணியும்தான் ஆளுங்கட்சியினர் தங்களின் முழு சக்தியையும் பணபலம் உள்ளிட்ட மற்றசாதனங்களையும் பகிரங்கமாகப் பயன்படுத்தியும்கூட ஏழை நடுத்தர மக்களின் இயக்கமான நமது கழகத்திடம் தோல்வியடையச் செய்தது.

இவ்வித அரும்பணியாற்றிய கழகத் தோழர்கள் ஒவ்வொருவருக்கும், அடுத்த முக்கிய கடமையாக எதிர்நோக்கி யிருப்பது இந்தி எதிர்ப்பு அறப்போராட்டம் என்பதை அனைவரும் அறிந்ததேயாகும். இந்தித் திணிப்பை எதிர்ப்பதற்காக ஜுன் திங்களில்—சென்னை மாநகரில் நடைபெற்ற பொதுக்குழுவில் எடுத்த முடிவுக்கேற்ப இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழு தனது பணியினை நிறைவேற்ற முனைந்துவிட்டது. குழுவின் தலைவர் கலைஞர் கருணுநிதி அவர்களின் தலைமையில் 15-7-63 அன்று நடைபெற்ற போராட்டக் குழு எடுத்த முடிவுகளை பிரிதோரிடத்தில் வெளியிட்டிருக்கிருேம்.

இந்தித் திணிப்பை எதிர்த்து முறியடிப்பதில் நமது இயக்கத்திற்கு வரலாற்றுச் சிறப்புமிக்க பாரம்பரியம் உண்டு என்பதை இந்தியத் துணைக் கண்டமே அறிந்த உண்மையாகும். அதிலும் இதுவரை கண்டிராத அளவுக்கு இந்தி வெறியர்கள் அரசியல் ஆதிக்க திட்டத்துடன் திராவிடத்தை—தமிழகத்தை அதன் நாகரீகத்தை, கலாச்சாரத்தை பண்பாட்டை, சுயமரியாதையை தங்களின் காலடியில் மிதித்து நாசஞ் செய்யக்கூடிய வகையில் இந்தியைத் திணித்து வருகின்றனர். இந்தியத் துணைக்கண்டத்தை ஆளப் பிறந்தவர்கள் நாங்கள்தான் என்று ஆங்கிலேயர்கள் இறுமாந்திருந்த காலத்தைவிட ஆணவமிக்க கோலத்துடன் இந்தி மொழிக்காரர்களின் ஆசாபாசமும் இந்தி ஆதிக்கமும்தான் இந்தியத் துணைக்கண்டத்தையும் அம்மக்களையும் ஆளும் என்ற போக்கில் சட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

இந்தி ஆதிக்கத்திற்கு அடிமைப்பட்டுத்தான் நாமும், நமது எதிர்கால சந்ததியும் வாழவேண்டுமா என்ற திட்டவட்டமான கேள்வி தென்னக மக்கள் ஒவ்வொருவருக்கும் விடப்பட்டிருக்கிறது. தன்மானமுள்ள தென்னக மக்கள் எவரும், இந்தி மொழி ஆதிக்கத்திற்கு அடிமைப்பட்டு வாழ்வதைவிட அதை எதிர்த்து நின்று வெற்றி பெறுவது என்ற உறுதியான முடிவைத்தான் வரவேற்பர். அந்த முடிவைத்தான் கழகப் பொதுக்குழு எடுத்திருக்கிறது.

எனவே பொதுக்குழு இட்ட கட்டளைக்கேற்ப இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழு எடுத்துள்ள முடிவுகள் இனிதே நிறைவேறும் வகையில போராட்டக் குழுவுக்குத் துணையாய் நின்று சேலம், தஞ்சை, நெல்லை, சென்னை மாநாடுகள் வெற்றிகரமாக நடைபெறவும், அதேபோன்று சர்க்காரின் அடக்குமுறைகளை ஏற்றுக்கொள்ளும் உறுதிப்பாடுடன் அறப்போராட்டத்தில் கலந்துகொள்ள தயாராகுமாறும், நாடெங்குமுள்ள கழகத் தோழர்களையும் கிளைகளின நிர்வாகிகளையும் வேண்டிக் கேட்டுககொள்கிருேம்.

மற்றும் இந்தித் திணிப்பை எதிர்க்கும் பிற கட்சிகள் நமது அறப்போராட்டத்திற்கு உடனடியாக ஆதரவு தர இயலாவிட்டாலும் நாம் மேற்கொள்ளும் அறப்போராட்டத்திற்கு இதயபூர்வமான ஆதரவைத் தருவார்கள் என்பதில் ஐயமில்லை.

ஆதலின் நாம் நமது கடமையை தூய்மையுடன் நிறைவேற்ற முனைவோமாஞல் மாற்ருரும் மனவளம் பெறுவர். கழகம் வகுத்துள்ள பாதையைப் பின்பற்றுவர், நமது அறப்போரும் வெற்றி பெற்றே தீரும்.

அந்தத் திட நம்பிக்கையுடன் நமது மாபெருந் தலைவர் அறிஞர் அண்ணு அவர்களின் அறிவுரையை—வேண்டுகோளை—கழகத்தின் அன்புக் கட்டளையை—நம்மை எதிர்நோக்கியுள்ள கடமையை இனிதே நிறைவேற்ற புறப்படுங்கள் தோழர்களே புறப்படுங்கள்.

வெற்றி நமதே!

•

## பி. அண்டு. சி. மில் தொழிலாளரின் வேதனைக் குரல்!

அண்மையில் நடைபெற்ற கதவடைப்பின் காரணமாக பி. அண்டு. சி. மில் பெருந்தொழிலாளர்கள் தொல்லைகளுக்காளாக நேரிட்டது. என்ருலும் அவர்கள் அமைதியை இழக்காமல் அறவழியில் நடந்துவந்தனர். இந்நிலையில் அன்று தொழில் இலாக்காவை மேற்கொண்டிருந்த அமைச்சர் கனம் வெங்கடராமன் அவர்கள் தொழிலாளர்களை உடனடியாக வேலைக்குச் செல்லுமாறு பிரச்சினைகளை நீதிமன்ற முடிவின்படி நிறைவேற்றப்படுமென்றும், ஆனுல் வேலைக்குத் திரும்பும் எந்தத் தொழிலாளியும் மில் நிர்வாகிகளால் பழிவாங்கும் எண்ணத்துடன் வேலையிலிருந்து நீக்கப்படமாட்டார்கள் என்றும் உத்திரவாதம் அளித்தார். அதற்கேற்ப எல்லாத் தொழிலாளர்களும், வேலை நிறுத்த கால விருப்பு வெறுப்புகளை மறந்து வேலைக்குத் திரும்பினர்.

ஆனுல் மில் நிர்வாகிகளோ அமைச்சர் தந்த உறுதிமொழியைப் பொருட்படுத்தவில்லையென்று தெரிகிறது. முப்பது தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கப்பட்டிருப்பதே நாம் இவ்வாறு ஐயப்பாடு கொள்வதற்குக் காரணமாகயிருக்கிறது.

எனவே மற்ற பிரச்சினைகளைப் பெர்றுத்தவரை நீதிமன்றம் கூறும் முடிவை இரு சார்பிலும் ஏற்றுக் கொள்வதென்ருலும், இப்போது வேலையிலிருந்து விலக்கப்பட்டுள்ள முப்பது தொழிலாளர்களையும் உடனடியாக வேலைக்கு அமர்த்திக் கொள்ளுமாறு செய்வதில் அமைச்சர் அல்லது சர்க்கார் தங்கள் வாக்குறுதியை நிறைவேற்ற முன்வர வேண்டும். அப்படி முன்வருவதுதான் மீண்டும் விரும்பத்தகாத நிலை ஏற்படாமல் தடுப்பதற்குத் துணையாய் அமையும் என்பதையும் அமைச்சருக்கு எடுத்துக்காட்ட விரும்புகிருேம்.

இந்த முப்பது தொழிலாளர்களையும் உடனே வேலைக்கு அமர்த்திக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை தோழர் அந்தோணிப்பிள்ளை அவர்களின் சார்புடைய தொழிற்சங்கம் கூட முழு மனதுடன் ஆதரிப்பதாக அறிகிருேம். அதுமட்டுமல்லாமல் இந்த கோரிக்கையை பி. அண்டு. சி. மில் சம்பந்தப்பட்ட எல்லா தொழிற்சங்கங்களும் குறிப்பாக தி. மு. க. சார்புடைய தொழிற்சங்கமும் வலியுறுத்தி வருவதையும் தொழில்துறை அமைச்சரின் நினைவிற்குக் கொண்டு வருகிருேம்.

வெந்த புண்ணில் வேல்கொண்டு குத்துவதுபோல தொழிலாளர் தோழர்களுக்கு மேலும் வேதனையைத் தராமல், விலக்கப்பட்ட முப்பது தொழிலாளர்களையும் வேலைக்கு மீண்டும் அமர்த்திக் கொள்ளுமாறு மில் நிர்வாகிகளையும் கேட்டுக் கொள்கிருேம்.

தலைவலி போய் திருகுவலி வந்த கதைபோல இப்பிரச்சினையை வளரவிட வேண்டாம் என்று மீண்டும் தொழிலமைச்சரையும் பொதுவாக தமிழக அரசினரையும் கேட்டுக்கொள்கிருேம்.

# அகிம்சாமூர்த்திகளின் ஆட்சியிலே அலங்கோலம்!

## பொறுப்புள்ள ஜனநாயக ஆட்சியா? இல்லை போக்கிரித்தனமான போலீஸ் ஆட்சியா?

அண்ணல் காந்தியின் பரம்பரையினர் நாங்கள் என்று பறைசாற்றுகின்றனர் பதவியில் இருக்கும் பாரதமாதா புத்திரர்கள். அகிம்சையின் அவதாரங்களாம் ஆட்சிபீடத்திலே அமர்ந்துவிட்டிருக்கும் காங்கிரசார்.

"பாரிலே எந்த நாட்டிலும் இல்லை. பாரீர் நாங்கள் தந்திருக்கும் பேச்சுரிமையை" என்று மார்தட்டி பேசும் காங்கிரஸ்காரர்களைக் காணாதவர்கள் யாருமிருக்க முடியாது.

இப்படியும், இன்னும் பலப்பலவும் தங்கள் 'திறமையான ஆட்சியை எடுத்துக்காட்ட காங்கிரஸ் பக்தர்கள் கூறுவதை நாம் எல்லோரும், நாட்டினர் எல்லோரும், நல்லவர் எல்லோரும் அறிந்திருக்கின்றோம்.

இன்று நாட்டிலே நடப்பது என்ன?

"அரசாங்கத்தின் அநீதிகளை எடுத்துக்காட்டினால் அவனை அடித்து சிறையிலே தள்ளு என்றும், நாட்டிலே உள்ள குறைகளை எடுத்துக் கூறினால் காராக்கிருகத்தில் தள்ளி சித்ரவதை செய்தும்; எதிர்க்கட்சி தோழன் என்றால் ஏளனம் செய்தும்; லஞ்சம், ஊழல், நிர்வாகத்தில் திறமையின்மை, மோசடி. ஜாதிப் பித்து, மொழிவெறி, மாகாண வெறி போன்றவைகள் மலிந்தும் காணப்படுகிறது, காங்கிரஸ் ஆட்சி நடத்தும் ஒவ்வொரு இடத்திலும்.

இந்த ஆட்சியிலே நடக்கும் அக்கிரமங்கள் எத்தனை எத்தனையோ? அத்தனையும் எடுத்து எழுதுவது என்பது பெரியதோர் நூலாக முடியும்.

குறிப்பாக இந்த ஆட்சியிலே போலீஸ் நிர்வாகம் எந்த லட்சணத்தில் நடக்கிறது என்பது நம் எல்லோருக்கும் தெரியும்.

அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி, நினைத்தாலே நெஞ்சு பதறும் சேதி நடந்திருக்கிறது இந்தக் காருண்ய மிக்க காங்கிரசார் ஆட்சியிலே! சென்ற திங்கள் 11-ம் தேதி சிம்லா என்னுமிடத்திலே திதார்சிங் என்னும் இருபத்திரண்டு வயது இளைஞன் கைது செய்யப்பட்டான். காரணம் சிம்லா கடைவீதியில் குல்தீப் சந்த் என்பவனுடன் சண்டையிட்டான் என்பதுதான்.

இவர்கள் சண்டையிடுவது போலீசுக்கு தெரிந்ததும் சப்-இன்ஸ்பெக்டர் தலத்திற்கு விரைந்து திதார்சிங்கை கைது செய்து அழைத்துச் சென்றார். போலீஸ் ஸ்டேஷனில் திதார் சிங்கை பரிட்சை செய்து பார்த்ததில், அவன் குடித்துவிட்டிருந்ததாகத் தெரிந்ததாம்.

அவன் கைதான அன்று இரவே திதார் சிங்கின் தந்தையான ரூப்சிங் என்பவர் போலீஸ் ஸ்டேஷனுக்கு சென்று செக்ஷன் 34ன் கீழ் கைதான தீதார்சிங்கை ஜாமீனில் விடுதலை செய்ய ஒரு பாண்டு எழுதிக் கொடுத்திருக்கிறார். அந்த பாண்டு எழுதிக் கொடுத்திருந்தும் தீதார்சிங் விடுதலை செய்யப்படவில்லை. "பரீட்சைச் செய்வதற்காக ரிப்பன் ஆஸ்பத்திரிக்கு தீதார்சிங்கை அனுப்பியிருக்கிறோம், அங்கிருந்து வந்தவுடன் அவனை அனுப்புகிறோம்" என்று சொல்லி ரூப்சிங்கை அனுப்பிவிட்டனர் போலீசார்.

### வி. ஆர். மதனகோபால் பி.காம். டி ஐ.பி

நடு இரவு ஆகியும் பையன் வராததால், ரூப்சிங் மருத்துவ சாலைக்கு சென்று பார்த்திருக்கிறார். அங்கு இல்லாததால் போலீஸ் ஸ்டேஷனுக்கு சென்று பார்த்திருக்கிறார். அங்கு, முன்னமேயே விடுதலை செய்துவிட்டதாகக் கூறியிருக்கிறார்கள். அன்று இரவு முழுவதும் பையனைத் தேடி இருக்கிறார்கள்! ஆனால், பலன் ஏதுமில்லை.

அடுத்த நாள் ரூப்சிங் எழுத்து மூலமாக ஒரு மனுவை போலீஸ் சூப்ரெண்டன்டிடம் கொடுத்து இருக்கிறார். டெபுடி கமிஷனரிடம் அனுமதி பெற்ற போலீஸ் சூப்ரெண்ட், டிராபிக் இன்ஸ்பெக்டர் ஒருவரை பரிசீலனை செய்ய நியமித்தார்.

திதார்சிங்கை கைது செய்த சப்-இன்ஸ்பெக்டர் உடனே வேறு இடத்திற்கு மாற்றப்பட்டார்.

விசாரணைக்கு நியமிக்கப்பட்ட போக்குவரத்து இன்ஸ்பெக்டரால் ஜூன் 14-ந் தேதிவரை திதார் சிங் எங்கிருக்கிறான் என்று கண்டு பிடிக்க முடியவில்லை.

ஜூன் 14-ந் தேதி காலையில் நிர்வாணமாக, நினைவு தப்பிய நிலையில் திதார் சிங்கின் உடலை 200 அடி கீழ் உள்ள மலையடிவாரத்திலே சத்தியாதேவி என்னும் பெண்மணி கண்டு அந்த நிர்வாணமான உடலின் மீது ஆடையொன்றை போட்டுவிட்டு போலீசுக்கு தகவல் கொடுத்தாள்.

திதார் சிங்கை மருத்துவ சாலைக்கு எடுத்து சென்றனர். ஆனால், காயங்களின் கொடுமையால் மருத்துவ சாலையிலேயே மடிந்துவிட்டான்.

ஆட்சியிலே இருக்கும் காங்கிரசு கட்சி உறுப்பினர்கள் தவிர மற்ற கட்சி உறுப்பினர்கள் உட்பட பொதுமக்கள் சுமார் 2000 பேர் வரை டெபுடி கமிஷனரிடம் சென்று நீதி கோரினர்.

உடனே டெபுடி கமிஷனர் திதார் சிங்கின் மரணத்திற்கு காரணமறிய விசாரணைக்காக மாஜிஸ்திரேட் ஒருவரை நியமித்தார்.

விசாரணை மாஜிஸ்திரேட்டான கே. கே. திர் என்பாரின் முன்னர் ரிப்பன் மருத்துவசாலையின் பெரிய டாக்டர்கள் இருவர் பிரேத பரிசோதனை செய்து தலையிலே ஏற்பட்ட பலத்த காயம் இரத்தத்தை இழக்கச்செய்து மரணமடையச் செய்தது என்று கண்டறிந்தனர். மேலும், இரண்டு நாட்களுக்கு முன்னர் ஏற்பட்ட காயத்தினாலும், உடனுக்குடனே உரிய சிகிச்சை கொடுக்காததினாலும்தான் மரணத்திற்கு முக்கிய காரணம் என்றும் அறிந்தனர்.

திதார் சிங்கின் மரணம் தற்செயலாக நிகழ்ந்தது அல்லவென்றும், அவனுக்கு ஏற்பட்டயாவும் அவன் போலீசாரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டபோதே ஏற்பட்டது என்றும், இதற்கு போலீசார்தான் பெரிதும் பொறுப்பு என்றும் விசாரணை மாஜிஸ்திரேட்டு கூறியதை பெரிதும் ஆமோதித்து டெபுடி கமிஷனர் உரிய நடவடிக்கை எடுத்தார்.

என்ன செய்து என்ன பயன்?

அநியாயமாக உயிர் போன அந்த இளைஞன், வாழ்வின் ஆரம்பப் படியிலே அடியெடுத்து வைத்தவன், அவனுடைய உயிர் திரும்பி வருமா?

'இம்'மென்றால் சிறைவாசம், 'உம்'மென்றால் வனவாசம் போல் காட்டு தர்பார்தானே இப்போது நடக்கிறது.

பெயரளவில் "ஜனநாயகம்" என்று வெள்ளைத் தொப்பி வீரர் வாய் வீச்சு வீசலாம். ஆனால், அது பெயரளவில்தான். செயல் முறையிலே என்னென்னவோ நடக்கின்றன.

பெரிய பணக்காரனாக இருந்து; ஆளும்கட்சிக்கு ஜால்ரா தட்டிக் கொண்டு இருந்தால் அவன் [illegible]வளவு கொடிய குற்றம் செய்[illegible]தாலும் தப்பித்துக்கொண்டு[illegible]லாம். ஆனால், எதிர்க்க[illegible]லிருப்போரும், பொதுமக்[illegible] இன்று எந்த நிலையிலே இ[illegible]கின்றனர் என்பதை நாடு அ[illegible]ம் நாமறிவோம்.

பொதுமக்களின் நன்மைக்காக இருக்கும் போலீஸ் இலாகா அவர்களுக்கு நன்மை செய்யாமல் தீமையல்லவா செய்கிறது.

'திதார் சிங்' போன்று எத்தனையோ பேர்களை போலீஸ் இலாகா பலி வாங்கியிருக்கிறது. வெளிச்சத்துக்கு வந்தது இது. வராதது எத்தனையோ?

### கடலின் பெயரே மாறுகிறது!

'இந்து மகா சமுத்திரம்' என வழங்கும் பெருங் கடலுக்கு 'இந்தோனேஷ்ய பெருங்கடல்' எனப் பெயர் மாற்றம் செய்திருக்கின்றனர் இந்தோனேஷ்யக் கடற்படையினர்!

இந்தோனேஷ்யக் குடியரசுத் தலைவர் டாக்டர் சுகர்னோவின் விருப்பப்படியே இப் பெயர் மாற்றம் செய்யப் பட்டுள்ளதாம். இப்பெயர் மாற்ற உத்தரவு 21-7-63 அன்று கடற்படைத் தளபதியால் பிறப்பிக்கப்பட்டதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

# ‘நாளை நமதே!’

சி. துரைச்செல்வம்

## “குமுதமே” தெளிவுபெறுவாயாக

‘உண்மையைச் சொல்லுவதற்குத்தான் தைரியம் தேவை! பொய் சொல்லுவதற்கு அது தேவையில்லை என்றான் ‘ஹெர்பர்ட்’.

தைரியமற்ற சில பத்திரிகைகள், ஆட்சியாளர்கள் இடாமலேயே பல எடுபிடி வேலைகளை செய்து, பாதம் தாங்கி பணிவிடை செய்ய முன்வந்துள்ளன!

கற்பை காசாக்குகின்ற விலைமகள் ஒருவனிடமிருந்து கிடைக்கும், அன்பையும் காதலையும்விட காசையே பெரிதென மதிப்பாள்! அதுபோல இன்றைய தினம் சில ஏடுகள் நீதியையும், நேர்மையையும் கொன்றுவிட்டு ஆட்சியாளரின் அன்பைப் பெறுவது ஒன்றையே தன் இலட்சியமாகக் கொண்டு கூவத்திலே குளித்து அந்த நறுமண நாற்றத்தை நாலாத் திக்குகளிலும் பரப்பிடவும் முன்வந்துள்ளன.

அத்தகைய பட்டியலிலே தன்னையும் ஓர் அங்கமாகச் சேர்த்துக் கொண்டு சில காலமாக கூவத்தின் மணத்தை பரப்பி தன்னுள் மகிழ்ந்து கொண்டுள்ளது குமுதம் இதழ்.

சில தினங்களுக்கு முன்னால் ‘படுபயங்கரம்!’ என்ற ஒரு பயங்கரமான தலைப்பைத் தீட்டித் தன் மேதாவிலாசத்தை மேதினிக்கு காட்டி மகிழ்ந்து கொண்டது,

கடந்த கிழமை, ‘பெரியாரின் ஆசி’ என்று பெயரிட்டு, சேளிப் படமும் போட்டு. ஆச்சாரியார் வாழ்த்துவது போலவும், அண்ணா வணங்குவது போலவும் காட்டி தன் காழ்ப்பு உணர்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டது!

ஆனால், இத்துடன் அந்த எடுபிடி ஏட்டின் பணி நின்றுவிடவில்லை! இந்த இதழிலும் தோளுக்கு வலு இல்லையா? என ஒரு கேள்வி. கணையைத் தொடுத்துள்ளது.

திருவண்ணாமலையில் பெற்ற வெற்றி பற்றி — தி. மு. க.வினரால் செய்யப்படும், குறுகலான விமர்சனம் இருக்கிறதே, அது வருந்தத்தக்கது.

திராவிட முன்னேற்றக் கழகம் 1962ல் நடந்த பொதுத் தேர்தலின்போது தனது தேர்தல் அறிக்கையில், தனி நாடு பெறுவதுதான் தன் இலட்சியம்! என்று தெள்ளத் தெளிய விளக்கமாகக் கூறியது.

திருச்செங்கோட்டில் நடந்த தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வென்றால், அது பிரிவினை சக்திக்குக் கிடைத்த வெற்றியாகி விடும். காங்கிரஸ் வென்றால் அது இந்திய ஒருமைப்பாடு ஓங்க கிடைக்கும் வெற்றியாகும் என்று இன்றைய இரும்பு மந்திரி கனம். சி. சுப்பிரமணியம் முழங்கினார்.

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் வென்றால்? அது விடுதலைக்கு கிடைக்கும் வெற்றிதான் இது அமைச்சரே ஒத்துக் கொண்ட முடிவு!

இந்திய ஒருமைப்பாடு! என்ற ஒலி இந்தியாவிலே எழுந்ததற்கு முக்கியமான காரணம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் விடுதலை கோரிக்கையும், அது தேர்தலிலே பெற்ற வெற்றியும்தான்! இதை யாரும் மறுக்க முடியாது.

அன்று முதல் இன்றுவரை திராவிட முன்னேற்றக் கழகம் தன் கொள்கையை அணுவளவேனும் மாற்றி அமைத்துக் கொண்டது கிடையாது.

எப்படி திருச்செங்கோட்டிலே, தி.மு. கழகம் வென்றால் பிரிவினை கோரிக்கை வென்றதாக அமைச்சர் ஒத்துக்கொண்டாரோ, அது போலத்தான் திருவண்ணாமலையிலேயும் கழகம் பெற்ற வெற்றி விடுதலைக்கு கிடைத்த வெற்றியாகும்! அது எப்படி குறுகலான விமர்சனமாகும்? வளமாக வாழ வகை செய்து தர இயலாத வக்கற்றவர்களிடமிருந்து விடுபட்டு வாழ எண்ணுவது குறுகிய மனப்பான்மையா?

“பிரிவினைக் கருத்தை மறந்துவிட்டு, அல்லது குறைந்த பட்சம் ஒதுக்கிப் போட்டுவிட்டு மக்கள் தொண்டு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தி. மு. க. முன்னேறுமானால்; அது செயின்ட்சார்ஜ் கோட்டையையே கைப்பற்றும் என்று நினைத்தோம்! ஆனால், தி. மு. க. தன் பிரிவினைக் கொடியை தூக்கிப் பிடிப்பதில் காட்டி இருக்கும் முனைப்பிற்கும் சம்மந்தம் இருப்பதாக தெரியவில்லை.”

திராவிட முன்னேற்றக் கழகத்தின் குறிக்கோள், மக்கள் படசி—பிணி—பகை இன்றி வாழவேண்டும் என்பதுதான்.

மற்றச் செல்வங்களைவிட, மழலைச் செல்வங்களே போதுமென செல்லக் குழந்தைகளை பெற்றெடுத்த தாய், வறுமையின் கொடுமையால், அன்னமிட்ட தன் கையாலேயே விஷமிட்டுக் கொன்று; தானும் மடியும் நெஞ்சை பிளக்கும் நிகழ்ச்சிகள்.

கரும்பு நிகர், குழவி! அரும்பு மலர்ந்ததென தன் சின்ன செவ்விதழ் விரித்து சிரித்திடும், சிங்கார செல்வத்தை ‘பிள்ளையோ—பிள்ளை’ என்று விலை கூறி விற்றிடும் கொடுமைமிகு காட்சிகள்!

படித்தேன்! பாஸ் செய்தேன்! பயனில்லை! படியாத காமராசர், ஆட்சியிலே படியாதவர்களுக்குத்தான் வேலை கிடைக்குமோ! என எண்ணித் தவிக்கும் எண்ணற்ற இளைஞர் கூட்டம்.

பகல் முழுதும் பாடுபட்டு, இரத்தத்தை வியர்வையாக்கி படி அரிசி பத்தணாவிற்கு வாங்கும் சக்தியற்று, பாதி வயிற்றுக் கஞ்சியுடன் வாடும் பாட்டாளி மக்கள்!

இந்த இனிய காட்சிகள் எல்லாம் இந்திய ஒருமைப்பாட்டிலே ஒட்டி வாழ்வதால்தான் நம் நாட்டிற்கு ஏற்பட்டுள்ளது. இந்த அவல நிலையை எப்பாடுபட்டேனும் போக்குதல் வேண்டும்;

பசியும், பிணியும், பகையும் இல்லாத நாடு ஒன்றை காண வேண்டும்! உருவாக்க வேண்டும் என்பதுதான் தி.மு.க.வின் திட்டம். ஆனால் கொண்ட கொள்கையை விட்டு விட்டு அல்ல!

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையை கைப்பற்றவேண்டும் என்று மட்டும் திராவிட முன்னேற்றக் கழகம் விரும்பவில்லை. செயின்ட்ஜார்ஜ் கோட்டையை கைப்பற்றுவதுடன் அதன் பணி முடிந்துவிடுவதும் அல்ல! அது செல்லுகின்ற விடுதலை பயணத்தில் பல படிகளில் இறுதிபடிக்கும் முதல்படித்தான் செயின்ட் ஜார்ஜ் கோட்டை… …

“ஆட்சிபீடத்தில் அமர்ந்து மக்களுக்கு பணி செய்ய வேண்டுமானால், தி. மு. கழகம் தன் பிரிவினை கொள்கையை வற்புறுத்துவதை விட்டுவிட வேண்டும்.”

அருமையான உபதேசம்!

அழகான ஓவியத்தைக் காட்டி இது எத்துணை சிறப்பானது! இன்னின்ன வண்ணக் குழம்புகள் கலந்தது! திறமைமிகு ஓவியன் தன் திறன் முழுதும் காட்டி வடித்து தந்தது. இதற்கு இணை ஏதுமே கிடையாது. இந்த அழகு மிகு ஓவியத்தை நீ எடுத்துக் கொள் என்று கூறிவிட்டு:—

அதற்கு மாறாக, உலகத்து வனப்புமிகு காட்சிகளை காண உதவுகின்ற உன் இரு கருவிழிகளையும் கொடுத்துவிடு என்று சொல்லுவது போலத்தான், ‘குமுதம்’ இதழ் ஆட்சியிலே அமர வேண்டுமானால், உங்கள் பிரிவினை கொள்கையை விட்டுவிட வேண்டும் என்று சொல்லுவதும்.

இறுதியாக ‘குமுதம்’ ஏளனமாகக் கேட்டிருக்கிறது, ஆட்சிப் பொறுப்பை ஏற்க தி. மு. க.வினர் அஞ்சுகிறார்களா?

யார், யாரைப் பார்த்து கேட்க வேண்டிய கேள்வி?

தன் தோள் வலிவாலும், வாள் வலிவாலும் இமயம்வரை வென்று அதன் உச்சியிலே இளஞ்சினையை பொறித்தவன் பரம்பரையினரைப் பார்த்தா கேட்பது?

எங்கள் தோளுக்கு வலிவு உண்டு! என்பதனை சென்னை மாநகராட்சி மன்றத்தை ஏற்று அருமையாக ஆட்சி செய்துகாட்டிய பிறகுமா உமக்கு இந்த சந்தேகம் வந்தது?

வேடிக்கை! விசித்திரம்!

அரசியலில் ‘தோள் வலிவு’ என்பது, எது என்று கருதுகிறது குமுதம்?

காலத்திற்கு ஏற்ப பல்வேறு சந்தர்ப்பங்களில் ‘அரசியல் வலிவு’ என்று சொல்லுகின்ற தத்துவம் மாறிவருகிறது.

வில்லும்—வாளும் வலிமைமிகு சேனையும் வலிவாகக் கருதப்பட்ட காலம் ஒன்று இருந்தது. அது படிப்படியாக வளர்ந்து அதன் வளர்ச்சியிலே சிறு புரட்சி ஏற்பட்டு, பெரும் மக்கள் கிளர்ச்சியாக மாறி, முடியரசிலிருந்து குடியரசாகி இன்று அரசியல்—மக்கள் சக்தியின் பிரதிபளிப்பாக மாறியுள்ள சமுதாய சகாப்தம்.

இதைத்தான் கடந்தகால அரசியல் வாலாறுகள் நமக்கு எடுத்துக்காட்டி வந்திருக்கின்றன!

வளர்ந்து வரும் விஞ்ஞான உலகத்தின் சாதனையில் தனக்கு இருக்கின்ற பொருளாதார வீக்கத்தால், அணு ஆயுதங்களைக் கொண்டு, மற்ற நாடுகளை பயமுறுத்த முடியும்! என்ற தத்துவமும், அமெரிக்காவிற்கும், இரசியாவிற்கும் ஏற்பட்ட ‘கியூபா’ தகராறுகளின் நடவடிக்கைகளும், நிகழ்ச்சிகளும் இதுவரை, வல்லரசுகளிடையே ஏற்படும் சர்ச்சைகளும், இந்தியத் துணைக்கண்டத்தின் மீது சீனா படை எடுத்து, பின்னர்தானே தன் படை எடுப்பை நிறுத்திக் கொண்ட போக்கும் ஜனநாயகத்தின் போக்கை உலகத்திற்கு எடுத்துரைக்கும் சின்னங்கள்! என்பதை யாரும்… …ஏன் குமுதமே கூட மறுத்துரைக்க முடியாது!

இன்றைய ஜனநாயக அரசியலில் மக்களின் வலிவே ஒரு கட்சி ஆட்சி செய்யும் ஒப்பற்ற பொறுப்பை அளிக்கிறது!

கடந்த கால, திராவிட முன்னேற்றக் கழகத்தின் நடவடிக்கைகளை நடுநிலையோடு நின்று ஒரு முறை கண்ணோட்டமிட்டால்,

(7-ம் பக்கம் பார்க்க)

# அறிஞர் பிறந்த நாள் இந்தித் திணிப்பு எதிர்ப்பு நாள் !

## போராட்ட திட்ட அறிக்கை அக்டோபர் 2-ம் நாள் வாக்கில் தரப்படும்

## அக்டோபர் 6-ம்நாள் சென்னையிலும், இடைக்காலத்தில் சேலம், தஞ்சை, நெல்லையிலும் மாநாடுகள்

# இந்தி எதிர்ப்பு போராட்டக்குழு முடிவுகள்

15—7—63 அன்று மாலை 5 மணி முதல் இரவு 9-மணிவரை சென்னை அறிவகத்தில், இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழுத் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற போராட்டக்குழு எடுத்த முடிவுகள் வருமாறு ;—

போராட்டக் குழு உறுப்பினர்கள் அந்தந்த மாவட்டத்தில் வட்டக் கழக நிர்வாகிகளின் துணைகொண்டு உடனடியாகச் சுற்றுப்பயணம் செய்து, போராட்டத்தில் கலந்துகொள்ளும்தோழர்களின் பட்டியலைத் தயாரிக்க வேண்டுமென்று இக்குழு முடிவு செய்கிறது.

போராட்டக் குழுவின் அடுத்தக் கூட்டத்தை இராமநாதபுரம் மாவட்டம் சிவகெங்கை நகரில் நடத்துவதென்று இக்குழு முடிவு செய்கிறது.

ஆகஸ்டு—செப்டம்பர் ஆகிய இரு திங்களிலும் இந்தித்திணிப்பு எதிர்ப்பு பிரச்சாரத்தைத் தீவிரமாகவும் பரவலாகவும் நாடு முழுவதும் நடத்துவதற்கு இக்குழு ஏற்பாடுகளை மேற்கொள்கிறது.

இந்தி எதிர்ப்புப் பிரச்சாரப் பொதுக் கூட்டங்கள், ஓரங்க நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள், சுவரொட்டிகள் துண்டு அறிக்கைகள் இன்னபிற சாதனங்கள் மூலம் நாடெங்கும் இந்தித் திணிப்பினால் விளையும் கேடுபாடுகளை விளக்க இக்குழு முனைந்துமுயற்சிகளை உடனடியாக மேற் கொள்ளும்.

ஆகஸ்டு 4-ஆம் நாள் சேலம், கோவை நீலகிரிஆகியமாவட்டங்களும் கருநாடக மாநிலமும் பங்குகொண்டு நடத்தும் இந்திஎதிர்ப்பு மாநாடு, சேலம் நகரில் சட்டமன்ற எதிர்க்கட்சித்தலைவர் நாவலர். நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

திறப்பாளர்: பாராளுமன்ற தி. மு. க. கட்சித் தலைவர் கி. மனோகரன்.

ஆகஸ்டு 25-ம் நாள் தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு மாவட்டங்கள் பங்குகொண்டு நடத்தும் இந்தி எதிர்ப்பு மாநாடு தஞ்சை நகரில் கொள்கைபரப்புச் செயலாளர் திருமதி சத்தியவாணி முத்து அவர்கள் தலைமையில் நடைபெறும்.

திறப்பாளர்: தலைமை நிலையச் செயலாளர் திரு. கே. எ. மதியழகன் எம்.எல்.எ-

செப்டம்பர் 22-ஆம் நாள் நெல்லை, மதுரை, முகவை, குமரி ஆகிய மாவட்டங்களும், கேரள மாநிலமும் பங்குகொண்டு நடத்தும் இந்தி எதிர்ப்பு மாநாடு திருநெல்வேலி நகரில் தொழிற் சங்கச் செயலாளர் திரு. எ. கோவிந்தசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும்.

திறப்பாளர்: திரு. ப. உ. சண்முகம் எம்.எல்.எ.

அக்டோபர்: 6-ஆம் நாள் சென்னை, செங்கற்பட்டு, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களும், ஆந்திர மாநிலமும் பங்குகொண்டு நடத்தும் இந்தி எதிர்ப்பு மாநாடு சென்னையில் அறிஞர் அண்ணா தலைமையில் நடைபெறும்.

திறப்பாளர்: பேராசிரியர் க. அன்பழகன் எம்.எல்.சி.

இந்த நான்கு மாநாடுகளுக்கும், போராட்டக் குழுவே வரவேற்புக்குழுவாக அமைந்து மாநாடுகளை நடத்திவைக்கும் பொறுப்பை நிறைவேற்றும். நான்கு மாநாடுகளுக்கும் குழுத் தலைவர் கலைஞர் கருணாநிதி எம்.எல்.ஏ. வரவேற்புத் தலைவராகவும், அமைப்புச்செயலாளர் என். வி. நடராசன் செயலாளராகவும், பணிவாற்றுவர். அதேபோன்று, தஞ்சை,நெல்லை, சென்னை சேலம் ஆகிய மாவட்டங்களின் செயலாளர்களான தோழர்கள் ஈ.ஆர். கிருஷ்ணன், மன்னை நாராயணசாமி, எம். எஸ். சிவசாமி, நீல நாராயணன் ஆகியோர் தங்கள் தங்கள் மாவட்ட மாநாட்டில் செயலாளர்களில் ஒருவராகயிருந்து பணிவாற்றுவர்.

ஆக் நான்கு மாநாடுகளும், ஒவ்வொரு மாநாட்டுக்கும் முதல் நாள் முறையே ஆகஸ்டு 3, 24, செப்டம்பர் 21, அக்டோபர் 5 ஆகியநாட்களில் இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழுவின் முன்னிலையில், மாநாடுகள் நடைபெறும் பகுதியோடு இணைந்த மாவட்டங்கள், மாநிலங்களின் பிரதிநிதிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், வட்டக் கழக—பகுதிக் கழகச் செயலாளர்கள் ஆகிய பிரதிநிதிகள் அடங்கிய பாசறைக் கூட்டமும் நடைபெறும்.

செப்டம்பர் 15-ம் நாளன்று அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளைத் தொடர்ந்து 21-ம் நாள் முடிய 'நாடெங்கும் இந்தி எதிர்ப்பு வாரமாகக் கொண்டாடும்படி கழகத்தின் எல்லா அமைப்புகளையும் இக்குழு வேண்டிக் கேட்டுக்கொள்கிறது.

மாவட்டங்களிலும், மாநிலங்களிலும் கீழ்க்கண்டவாறு போராட்டக்குழு சுற்றுப்பயணம் செய்து நிலைமைகளை அறிந்து போராட்ட வீரர்களின் பட்டியலைத் தயார் செய்ய வேண்டுமென்று குழு முடிவு செய்கிறது:-

சென்னை
நீலநாராயணன்
செங்கற்பட்டு
சி. வி. எம். அண்ணாமலை
வட ஆற்காடு
இரா. தருமலிங்கம்
ஆந்திர மாநிலம்
வி. நரசிம்மலு
சேலம்
ஈ. ஆர். கிருஷ்ணன்
கோவை, நீலகிரி
உடுமலை நாராயணன்
கருநாடகம்
தி. திராவிடமணி
தஞ்சை
மன்னை ப. நாராயணசாமி
திருச்சி
அன்பில் தருமலிங்கம்
தென் ஆற்காடு
இரா. சாம்பசிவம்
நெல்லை
எம். எஸ். சிவசாமி
மதுரை
எஸ். முத்து
முகவை
எஸ். எஸ். தென்னரசு
குமரி
பி. எம். கண்ணு
கேரளம்
சுபேர்

செப்டம்பர் திங்கள் 23-ம் நாள் முதல் அக்டோபர் 1-ம் நாளுக்குள் போராட்டக் குழுத் தலைவர் திரு. மு. கருணாநிதி, திரு. என். வி. என். ஆகியோர் அந்தந்த மாவட்டத்திலும் மாநிலத்திலும் உள்ள போராட்டக் குழு உறுப்பினர்களுடன் சுற்றுப்பயணம் மேற்கொண்டு போராட்ட நிலை பற்றி இறுதி முடிவு எடுத்து, பொதுச்செயலாளர் அண்ணா அவர்களின் அனுமதிக்கு குழுவின் அறிக்கையை வைப்பார்கள்.

தோழர்கள்; அமைப்புச்செயலாளர் என். வி. நடராசன், நீல நாராயணன், சி.வி.எம். அண்ணாமலை, அன்பில் தருமலிங்கம், எஸ். முத்து, எஸ். எஸ். தென்னரசு, இரா. சாம்பசிவம், உடுமலை நாராயணன், பி. எம். கண்ணு, தி. திராவிடமணி, வி. நரசிம்மலு ஆகியோர் கலந்து கொண்டனர்.


தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற
வெண்சங்கு சீயக்காய்த் தூள்
எங்கும் கிடைக்கும்.
மணத்தில் மிகுந்த
செல்வம் ராணி ஊதுபத்திகளை
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள் :
வெண்சங்கு சீயக்காய்த்தூள் பாக்டரி
3037—38 டபீர்குளம் ரோடு, தஞ்சை

# அஞ்சாநெஞ்சன் பதில்!

**சி. எம். இராமசாமி, கோவை.**

**கே: சீன ஆக்ரமிப்பு நடவடிக்கைகள் இந்தியாவை பயமுறுத்திக்கொண்டிருக்கும் இச்சமயத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்துவது தேசத்துரோகமாகும், ஆகையினுல் போராட்டத்தில் தி. மு. க. இறங்கக் கூடாது என்று லால்பகதூர் சாஸ்திரி கூறியிருக்கிருரே—அதன்படி தி. மு. க. போரரட்டத்தில் இறங்காதல்லவா?**

ப: சீன ஆக்ரமிப்பு, இந்தியத் துணைக்கண்டத்தை அச்சுறுத்திக்கொண்டிருப்பதைப் பற்றிச் சிறிது கூட கவலைப்படாமல், பெரும் கருத்துவேறுபாடுகளுக்கும், பிளவுகளுக்கும் காரணமாயுள்ள இந்தியை இந்திய ஆட்சிமொழியாக ஆக்கும் சட்டத்தை, தங்கள் கட்சியின் எண்ணிக்கை பலத்தை மட்டுமே (காண்டு நிறைவேற்றிய காங்கிரசும், இந்திய அரசும் எவ்வளவு பெருந் தேசத்துரோ[illegible]தைச் செய்திருக்கிறதென்[illegible]த லால்பகதூர் போன்றவர் [illegible] எவ்வளவு மறைத்தாலும் [illegible]ரசியல் அறிவுடைய எவரும், [illegible]கள் மனசாட்சியை எந்த ஆசாபாசத்திற்கும் அடிமையாக் [illegible] கொள்ளாத அனைவருமே [illegible]ண்ர்ந்ததாகும்.

இதுதான் தேசத்துரோகம், இதுதான் தேசபக்தி என்று அளவிட்டுக்கூற தாம் எங்கோ அலாதியான உரிமை பெற்றிருப்பவர் போல லால்பகதூர் சாஸ்திரி அடிக்கடி பேசுவது அதிகப்பிரசங்கித்தனமாகும் என்று கூறினுல் மிகையாகாது.

இந்நெருக்கடியான நேரத்தில் இந்தித் திணிப்பை எதிர்ப்பது சீன ஆக்ரமிப்புக்கு ஆதரவு தருவது போலாகும் என்று வாதம் புரிவதைட்போல ஏமாற்றுத்தனம் வேறு இருக்கமுடியாது. விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் அரசினர் நடத்திய அடக்குமுறை அநீதிகளைக் கூட மறந்து சீன ஆக்மிப்பைத் தகர்த்தெறிய தி. மு. கழகம் மனமாரதனது ஒத்துழைப்பைத் தந்து வந்திருக்கிறது.

தி. மு. கழகம் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அனைத்தும் தந்த இந்த ஒத்துழைப்பையும், அவசர காலச் சட்டத்தையும் தங்களின் ஆதிக்கத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் இந்தித் திணிப்புச் சட்டத்தை கட்சி பலத்தை மட்டுமே கொண்டு, (அரசியல் விவேகத்தையும் நாட்டில் உருவாகிவந்த ஒற்றுமையையும் சீர்குலையச்செய்து) நிறைவேற்றியதானது படுமோசமான தேசத்துரோகச் செயல் என்பதுமட்டுமல்லாமல், நம்பிக்கைத் துரோகமானது என்று கூறினுலும் பொருந்தும்.

இந்த உண்மைகளெல்லாம் உலகுக்குத் தெரியாது என்ற எண்ணத்தில், தி. மு. கழகம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் அதுவும் இந்த நெருக்கடியான நேரத்தில் இறங்குவது தேசத்துரோகம் என்று லால்பகதூர் ஓலமிடுவதில் துளிகூட அரசியல் விவேகமோ நாணயமோ இருப்பதாகத் தெரியவில்லை. அறிஞர் அண்ணு அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தி. மு. கழகம் ஈடுபடுவதற்கும், சீன ஆக்ரமிப்பு நடவடிக்கைக்கும் சிறிதும் சம்பந்தமில்லையென்பதை விளக்கியிருக்கிருர்கள். சீன ஆக்ரமிப்பை எதிர்ப்பதில் தி. மு. கழகத் தலைவர் அண்ணு அவர்கள் தந்துள்ள உறுதிமொழியை என்றும் கழகம் நிறைவேற்றும்; ஆனுல், சீன ஆக்ரமிப்பாளர்களுக்கு ஏதாவது பிடியைத் தருவதென்ருல், அது லால்பகதூர் சாஸ்திரி அல்லது இந்திய அரசின் ஆதிக்க ஆசாபாசங்களைக்கொண்ட நடவடிக்கள்தான் காரணமாயிருக்குமேயல்லாது, தி. மு. கழகத்தின் நடவடிக்கை சிறிதுகூட அந்தப் போக்கில் இருக்காது. அதனின் தலைமை அவ்வளவு தூய்மையானது என்பதை ஏற்கனவே எடுத்துக்காட்டியிருக்கிறது.

○

8-ம் பக்கத் தொடர்ச்சி

நியமிக்கப்படுகிருர். அவர் சொற்படியே நீர் ஒன்வொன்றையும் இதன்மேல் செய்ய வேண்டுமென்பது கண்டிப்பான உத்தரவு.''

இதைப் படித்ததும் வள்ளிநாயகத்தின் தலை சுற்றத் தொடங்கி விட்டது. இந்திக்காரன் கொண்டு வந்திருந்த அறிக்கையை அவனிடமே எறிந்துவிட்டு அப்போதே அங்கிருந்து கிளம்பினுர் அவர். அந்த இந்திக்காரனே அதுவரை வள்ளிநாயகம் அமர்ந்திருந்த இருக்கையில் தொப்பென்றுபோய் உட்கார்ந்து கொண்டான்.

வள்ளிநாயகம் நேரே தம் இல்லத்துக்குச் சென்ருர். அன்று பகல் முழுதும் சிந்தித்தார். அன்று இரவு முழுவதும் சிந்தித்தார். சிந்தை குழம்பும் வரை, மூளை ஓயும்வரை சிந்தித்தார். ஒரே ஒரு முடிவைத் தவிர வேறு எந்த முடிவும் எடுப்பதற்கு அவருடைய தன்மான உணர்வு இடம் கொடுக்கவில்லை. அவர் மேலிடத்திற்கு ஒரு கடிதம் எழுதினுர்.

"இந்த நாட்டில் இந்தி கோலோச்ச வேண்டுமென்ற வெறி எண்ணுதற்கும் ஒண்ணுத அளவில் உங்களைப் பற்றிக் கொண்டிருக்கிறது. அந்த வெறி இயல்புக்கு மாருனது. அது பேரிடர் விளைக்கப் போகிறது. இதை அறியாப் பேதையீர் ஆடாத ஆட்டம் எல்லாம் ஆடக் கிளம்பியிருக்கிறீர். அந்த ஆட்டம் ஆட்சியலுவல்களையும், அரசியல் இரகசியங்களையும் நீங்கள் கிள்ளுக் கீரையாக எண்ணுமளவுக்கு வளர்ந்துபோய் விட்டது. எது எப்படியானுலும் சரி, இந்தி அரியணை ஏறினுல் போதும் என்பது தான் உங்கள் நோக்கமா? அப்படியானுல் அந்த நோக்கம் படுசூரணமாகப் போகிறது. இது வெறுஞ்சொல்லல்ல எச்சரிக்கை! இந்தி கோலோச்சும் அருகதை சிறிதும் இல்லாத மொழி! இந்தி ஆதிக்கத் திறமை இல்லாத மொழி! இந்தி எம் தாய்மொழிக்கு முற்றும் வேறுபட்டமொழி. இந்தி எம் தாய் நிலத்தில் வழங்காத மொழி. இந்தி எமக்கெல்லாம் அந்நியமொழி; அது எங்கள் தன்மானத்துக்குச் சவாலாக நிற்கும் மொழி; ஆவணக் குறிப்புக்கள் அந்த மொழியில் எழுதப்பட வேண்டும் என்பது பெரியதொரு வேதனை, நிறைந்த விந்தைக் கூத்து;—விந்தைக்கூற்று. அந்தக் கூற்றே இந்தி வெறியையும், அகந்தையையும், ஆதிக்கத்தையும் கொல்லும் கூற்று. இதுவரை ஆங்கிலத்தில் குறிப்புக்கள் எழுதப்பட்டு வருவதையே தமிழன் பொறுத்துக் கொள்ளவில்லை.

இனி ஆங்கிலத்தின் இடத்தை இந்தி கவருவதைத் தமிழன் பார்த்துக் கொண்டிருக்க மாட்டான். தென்னகத்தான் பார்த்துக் கொண்டிருக்க மாட்டான்! திராவிடத்தான் பார்த்துக் கொண்டிருக்க மாட்டான். இனி ஆங்கிலத்துக்குப் பதிலாக வரும் இந்திக்கு எந்தத் தமிழனும்—தன் மானமுள்ள எவனும் அடிமையாக மாட்டான். ஆவணக் கட்டுக்களிலிருந்து ஆங்கிலம் வெளியேறுமானுல், அங்கே குடியேற வேண்டியது இந்தியல்ல தமிழ்! என் தாய்த் தமிழ்!

எமக்கெல்லாம் இந்தி தெரியாது என்ற காரணத்தால் எம் மீது அதிகாரம் செலுத்த ஒரு குரங்கை அனுப்பியிருக்கிறீர்கள் அந்தக் குரங்குக்கு நிர்வாகம் என்ருல் என்னவென்று தெரியாது. அந்தக் குரங்கு அலுவலகக் கடமை பற்றி யாதும் அறியாது, அந்தக் குரங்குக்குள்ள திறமையெல்லாம் 'இந்தி தெரியும்' என்ற ஒன்றே ஒன்றுதான்.

அந்தக் குரங்குக்கு அலுவல் என்னும் பட்டுச்சட்டை மாட்டி, அதிகாரம் என்னும் மல்லிகை மாலை சூட்டி உயரமான இடத்தில் கொண்டுவந்து உட்கார வைத்துவிட்டீர்கள். அது கண்மண் தெரியாமல் ஆடத் தொடங்கியிருக்கிறது. அது தன் உடலில் அணியப்பட்டிருக்கும் அலுவல் என்னும் பட்டு அங்கியைச் சின்னுபின்னமாகக் கிழித்துப் போட்டுக்கொண்டிருக்கிறது. அது தன் கழுத்தில் கிடக்கும் அதிகாரம் என்னும் மல்லிகை மாலையைக் கசக்கிப் பிழிந்து கொண்டிருக்கிறது. இப்படி ஒரு குரங்கு—அதற்கு இந்தி தெரியும் என்ற ஒரே ஒரு தகுதி காரணமாகப் புரிகின்ற அட்டகாசங்கள் நிர்வாகமாகிவிடுமா என்ன? அந்த இந்திக் குரங்கிடம் என் போலும் நிர்வாகத் திறமையுள்ளவர்கள் பணிபுரிய முடியுமா என்ன? எனவே,

என் அலுவலகம் என்னும் கோபுரத்தின்மீது உட்காரவைக்கப்பட்டிருக்கும் அந்தக் குரங்கும், அது பேசும் இந்தி என்னும் இழிந்த மொழியும் இந்த அலுவலகத்திலிருந்து அகற்றப்பட்டாகவேண்டும். அப்படி அவை அங்கிருந்து அகற்றப்படும்வரை ஆட்சித் தலைவன் என்ற முறையில் நான் ஆற்றவேண்டிய கடமைகளை ஆற்றுவதற்கு முடியாத நிலையிலிருக்கிறேன்.''

இப்படியொரு கடிதத்தை எழுதியனுப்பிவிட்டு வாளா இருந்துவிடவில்லை வள்ளிநாயகம். இந்தியைத் தமிழ் மண்ணிலிருந்து ஓட்டுவதற்கு வேறுபல முயற்சிகளிலும் தீவிரமாக ஈடுபட்டார்.

○

## பெங்களூர்

——(0)——

பெங்களூர் வண்ணையம்பதி கர்நாடக படிப்பகத்தின் முதலாண்டு விழா 27-7-63 சனி மாலை 6-30 மணிக்கு திரு. து. சானகிராமன் தலைமையில் நடைபெறும்.

பேசுவோர்:

**டாக்டர் சத்தியவாணிமுத்து**
(தி.மு.க. பிரச்சார செயலாளர்)

திருவாளர்கள்: எம். வேணுகோபால், மு. அதியமான், பி. பா. அரங்கநாதன், எம். சி. ஏ. கிருட்டினன் எம்.சி.

# இந்தியறியார் எழுத்தறியாரா?

கனகு

○

திருவாளர் வள்ளிநாயகம் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவராகப் பத்தாண்டுகளுக்கு மேல் பணியாற்றி வருபவர். நிர்வாகத் திறமைமிகுந்தவர். அவர் பணியாற்றியுள்ள மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அவ்வளவு பேரின் பாராட்டுக்களையும் ஒருமுகமாகப் பெற்றவர். அவரையொத்த உயர் அதிகாரிகள் பலர் தங்களுக்கு விளங்காத குழப்பம் நிறைந்த செய்திகள்பற்றி அவரிடம் வந்துதான் விளக்கங்கேட்டுக்கொண்டு போவார்கள். நிர்வாக சம்பந்தப்பட்ட சிக்கலான செய்திகள் பற்றியும் அவரிடம் வந்துதான் ஆலோசனை கேட்டுக்கொண்டு போவார்கள். தீர்க்க முடியாதவை எனக் கைவிடப்பட்ட மேலிடத்து விவகாரங்கள் பலவற்றை இவர் மிகவும் எளிதாகத் தீர்த்து வைத்ததின் மூலம் நல்லவர்கள் பலரின் மதிப்புக்கும், பாராட்டுக்கும் பாத்திரமாகியிருப்பவர்.

நல்ல பண்பும், உயரிய குணமும் யாரிடம் நிறைந்திருக்கின்றதோ அவர்களிடம்தானே சீரிய திறமையும் நிறைந்திருக்கும். வள்ளிநாயகம் சிறந்த தமிழன்பர். தமிழில் அவர் அப்போதைக்கப்போது எழுதும் கட்டுரைகளைப் பத்திரிகைகளில் படிக்கும் தமிழர்கள் இப்படியொரு சால்புநிறைந்த தமிழறிஞர் நாட்டு நிர்வாகத்தில் உயர் அதிகாரியாக இருப்பது தமிழர்கள் எல்லாரும் பெருமைப்படத்தக்கதொரு செய்தி என்று வாயாரச் சொல்லிச் சொல்லி மனமாரப் பாராட்டிக் கொண்டிருப்பார்கள்.

வள்ளி நாயகம் தாய்மொழிப் பற்று மிகுந்தவர். அதேபோல் ஆங்கில அறிவு நிரம்பியவர். பொது விழாக்களில் அவர் சொற்பொழிவு ஆற்றும்போதுதான் இரு மொழிகளிலும் அவர் துறைபோயவர் என்பது கேட்போர்க்கு விளங்கும். அவர் யாருடனும் தமிழிலேயே உரையாடத்தான் விரும்புவார். அதற்காகத் தமிழ் தெரியாத வேற்றுமொழிக்காரர்களிடமும் தமிழிலேயே உரையாடப் புகுந்து, தமிழ் தெரியாது என்று அவர்கள் சொல்ல, 'நீங்கள் ஏன் தமிழ் படித்துக்கொள்ளக்கூடாது' என்று கேட்கும்—தம்மொழிக்கு மற்றவர்களை அடிமையாக்க வேண்டும் என்ற கீழ்மையான குணம் தொலைவில் நின்றுகூட அவரைப் பார்த்தது கிடையாது. அவர் தமிழில் பேசும்போது ஆங்கிலச் சொல் ஒன்றுகூட இவருக்குத் தெரியாதோ என்றுதான் கேட்போர்க்கு எண்ணத்தோன்றும். ஆங்கிலத்தில் அவர் பேசினாலோ ஆங்கில மேதைகளே அசந்து போவார்கள்.

இத்துணைத் திறமைவாய்ந்த வள்ளிநாயகம் இன்று எழுத்தறியாதவராக நின்றார் — நிறுத்தி வைக்கப்பட்டார். அவரை எழுத்தறியாதவராக அப்படி நிறுத்தி வைத்தது, அவரையொத்த, நிர்வாகத் திறமையுள்ள ஒருவரல்ல. மொழியறிவு நிரம்பப்பெற்ற ஒருவரல்ல. அறிவுசால் மேதையொருவருமல்ல. கேவலம் ஒரு இந்திக்காரன்.

அந்த இந்திக்காரன் தமிழகத்தில் ஒரு சாமானிய எழுத்தர் வேலைக்கும் தகுதியில்லாதவன். அந்த இந்திக்காரன் தமிழகத்தில் பள்ளி யிறுதித் தேர்வு எழுதி முடித்துள்ள சராசரி மாணவன் ஒருவனுக்கிருக்கும் பொது அறிவு கூட இல்லாதவன். அந்த இந்திக்காரனுக்கு வரலாறு தெரியாது. நிலவரை நூல் அறியான் அவன். ஆட்சிமுறை பற்றி அ, ஆ கூடத் தெரியாதவன். அந்த இந்திக்காரன் கணிதம் அறியான் விஞ்ஞானம் என்றால் என்னவென்று விளக்கங் கேட்பான் அவன். ஆனால் அவனுக்குத் தெரிந்தது ஒன்றே ஒன்று. அதுதான் இந்தி. அந்த இந்தி என்ற காட்டு மொழி ஒன்றைத் தெரிந்து கொண்டிருந்த காரணத்தால் அறிவுச்சுடர் எனப் புகழப்படும் வள்ளிநாயகத்திடமே அதிகாரம் செலுத்த வந்திருக்கிறான் அவன். ஆட்சிமொழித் தேர்வு என்று ஏதோ ஒரு தேர்வு வைத்தார்களாம் இந்தி ஆட்சியினர்.

அந்தத் தேர்வில் அந்த இந்திக்காரன் எளிதில் தேறிவிட்டானாம். உடனே அவனை வள்ளிநாயகத்துக்கு மேலதிகாரியாக அனுப்பி விட்டார்கள். அவனுடைய முக்கியமான வேலைகளில் ஒன்று என்ன தெரியுமா? வள்ளிநாயகத்துக்கு அவன் ஆசிரியராகிப் படிப்புச் சொல்லிக் கொடுப்பது. வள்ளி நாயகம் கட்டாயம் அவன் சொல்லிக் கொடுப்பதைக் கற்றுத்தான் தீர வேண்டும்.

ஆகவே இதுவரை தம்முடைய அலுவலகத்துக்குத் தாமே தலைவர் என்று எண்ணியிருந்த வள்ளிநாயகம் இனி தலைவரல்ல. அந்த அலுவலகத்தின் தலைவன் இனி அந்த இந்திக்காரன்தான். வள்ளிநாயகம் இந்தி தெரியாதவன்தான் என்ற ஒரே ஒரு காரணத்துக்காக அந்த அற்பப் பதரிடத்தில் கை கட்டி நின்று பதில் சொல்லவேண்டும்.


## தி. மு. க. இந்தி எதிர்ப்பு மாநாடு

(சேலம், கோவை, நீலகிரி, கருநாடகப் பகுதிகள்)

—((—))—

**4-8-63 ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு**

**சேலம் தாளமுத்து நடராசன் அரங்கில்**

தலைவர் :
**நாவலர் நெடுஞ்செழியன்**
எம். ஏ. எம். எல், ஏ.

திறப்பாளர் :
**நாஞ்சில் கி. மனோகரன்**
எம். ஏ. எம். பி.

**அறிஞர் அண்ணா**
மற்றும் கழக முன்னணியினர் கலந்துகொள்வர்.

வரவேற்புக் குழுத் தலைவர் : மு. கருணாநிதி எம்.எல்.ஏ.
செயலாளர்கள் : என். வி. நடராசன்
ப. ஆர். கிருஷ்ணன்

**நன்கொடை ரூ. 1. பெண்களுக்கு அணா 8**


வள்ளிநாயகம் ஒரு மொழியறிஞர். நிர்வாகத் திறமை மிகுந்தவர், சால்பு நிறைந்தவர் என்பனவெல்லாம் அந்த இந்திக்காரனுக்கு எப்படித் தெரியும்? அவன்தான் இந்தியைத் தவிர வேறு எதையுமே அறியாதவனாயிற்றே!

வந்ததும் அந்த இந்திக்காரன் வள்ளிநாயகத்திடம் கேட்ட கேள்விகள் எவை தெரியுமா? 'ஏன் என்னைப் பார்த்ததும் எழுந்து நிற்கவில்லை? ஏன் எனக்கு நமஸ்தே சொல்லவில்லை?' என்பவைதான்.

வள்ளிநாயகத்துக்கு இந்தி தெரியாவிட்டாலும் அந்த இந்திக்காரன் என்ன கேட்கிறான் என்பதை முகபாவத்தால் தெரிந்துக் கொண்டார். அப்படியே அதிர்ந்து போனார் அவர். தன்னைப் பார்த்து ஒருவன் அப்படிக் கேள்வி கேட்பான் என்று வள்ளிநாயகம் எப்போதுமே எண்ணி[illegible]தில்லை. எதிர்பார்த்ததில்லை. மு[illegible]லில் அந்த இந்திக்காரனைத் த[illegible]னுணர்வு உள்ளவனாகவே வள்[illegible] நாயகம் எண்ணவில்லை. ஏ[illegible] வெறியன் ஒருவன் — அதாவ[illegible] பித்தம் பிடித்த ஒருவன் அலுவல[illegible]கத்துக்குள் நுழைந்து விட்ட[illegible]தாகவே அவர் எண்ணினார். “இந்த வெறியனை எப்படி உள்ளே விட்டீர்கள்?” என்று அலுவலகத்து ஊழியரைப் பார்த்து வினவினார்.

அந்த இந்திக்காரன் மேலும் ஏதேதோ சொல்லிக்கொண்டே போனான். மறுபடியும் வள்ளிநாயகம் அவனைத் திரும்பிப் பார்த்தபோது அவன் கையில் அரசு முத்திரையிட்ட அறிக்கையொன்றிருந்தது. அந்த அறிக்கையை அந்த இந்திக்காரன் வள்ளிநாயகத்திடம் நீட்டினான். வள்ளிநாயகம் அந்த அறிக்கையை வாங்கிப் படித்தார். இந்தியிலிருந்த அந்த அறிக்கை ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டிருந்தது.

“இன்று முதல் அரசு அலுவல் சம்பந்தப்பட்ட ஆவணக் குறிப்புக்கள் அவ்வளவும் இந்தியிலேயே எழுதப்படவேண்டும் எக்காரணங்கொண்டும் எந்தக்குறிப்பும் ஆங்கிலத்தியோ தமிழிலோ எழுதப்படக்கூடாது. நீர் இந்தி தெரியாதவர் என்ற காணத்தால் உமது அலுவல் தொடர்பான குறிப்புக்களை எழுதுவதற்கும், சரிபார்ப்பதற்கும் இந்தி தெரிந்த நிர்வாகியொருவர் இன்று முதல் உமக்கு மேற்பார்வையாளராக

(7-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியர், வெளியிடுபவர், என். வி. நடராசன், அச்சிடுபவர், புவனேசுவரி—சோமு அச்சகம், 16, இப்ராகீம் சேட் தெரு, சென்னை-1

# எழுத்துலகில் அண்ணாவின் சகாப்தம்!

திருவடியான்

○

படைக்கப்பட்ட இலக்கியத்தை வைத்து விமர்சிப்பதை விடுத்து, படைத்த ஆளை வைத்து நூலை விமர்சிக்கின்ற விமர்சன மேதைகளின் திலகமென்பதை திருவாளர் தி. க. சிவசங்கரன் மதுரை இலக்கிய பெருமன்ற சொற்பொழிவின் மூலம் தன்னை நிரூபித்துக் காட்டியுள்ளார்.

நடுவராக வீற்றிருக்கும் நீதிபதி எப்படி எந்த ஒரு பக்கமும் சராமல், சமன் செய்து சீர்தூக்கும் துலாக்கோல்போல் நடுவுநிலைமை தவறாமல் தீர்ப்பளிக்க வேண்டுமோ, அத்தகைய பொறுப்புணர்ச்சியோடு, காழ்ப்புணர்ச்சிக்கும், கசப்புணர்ச்சிக்கும் ஆட்பட்டுவிடாமல் விமர்ச்சிக்கின்ற

## நசிவு இலக்கிய காலம் — விமர்சன மேதை சிவசங்கரன் கூற்று!

நற்பண்பு படைத்தவர்களையே சிறந்த விமர்சன கர்த்தாவாகக் கொள்ள முடியும். ஆனால், சிவசங்கரனோ?......

அண்மையில் மதுரையில் நடைபெற்ற தமிழ்நாடு, கலை—இலக்கியப் பெருமன்ற மாநாட்டின் கருத்தரங்கில் கலந்து கொண்ட சிவசங்கரன் "கதைத் துறை" என்ற தலைப்பில் நிகழ்த்திய சொற்பொழிவை படிக்கின்ற போழ்து! நடுநிலை கொண்ட எந்த ஒரு நல் இதயம் படைத்த தமிழனின் நெஞ்சும் விம்மி எழத் நான் செய்யும் ஆச்சரியத்தால்—ஆத்திர மிகுதியால்.

இந்த நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து பத்துப்பத்து ஆண்டுகளாக 1900த்திலிருந்து 1960 வரை அதாவது ஆறுகால கட்டங்களாக தமிழ் கதை இலக்கிய வளர்ச்சியை ஆராயப் புகுந்து, அகில இந்திய ரீதியில் மட்டுமல்லாமல், அதற்கு அப்பாலும் தனது பரந்த கண்ணோட்டத்தை அகில உலக ரீதியில் செலுத்தியுள்ளார். பத்துப்பத்து ஆண்டுகளாக பிரித்து விமர்சிக்க ஆரம்பித்து 1940-ம் ஆண்டுக்குப் பிறகு உள்ள நிலவரத்தை விமர்சித்திருப்பதைத்தான் நம்மால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

**1940-க்குப் பிறகு அண்ணாவும் அவரது அருமைத் தம்பிகளும் "ரோமாபுரி ராணிகள்", "குமரிக் கோட்டம்", 'வாழமுடியாதவர்கள்' போன்ற கதைகளை எழுதத்துவங்கிய காலத்தில் நசிவு இலக்கியமும் தோன்றிவிட்டது என்று துணிந்து கூறுவேன்.**

—இப்படி தனது காழ்ப்புணர்ச்சியைச் கக்கி, கழறியதன் மூலம் தனது மேதாவிலாசத்தை காண்பித்திருக்கிறார்.

நசிவு இலக்கியம் தோன்றிய காலத்தை குறிப்பிட வந்தவர்—நசிவு இலக்கியத்தையும், நல்ல இலக்கியத்தையும் விளக்கி இன்னின்ன காரணங்களால் இவை இவை இந்தந்த இலக்கிய அந்தஸ்தைப் பெறுகிறது என தரம் பிரித்து காட்ட முன்வந்திருப்பாரானால் ஒரு வேளை அவரை போற்றிப் பாராட்டி இருக்கலாம்.

அண்ணாவையும் அவருடைய தம்பிகளையும் சாடிக்கொண்டே செல்கின்ற அவர் திடீரென தனது வயிற்றெரிச்சலையும் கொட்டுகிறார்.

**"1940-ம் ஆண்டு முதல், 'கல்கி' யின் எழுத்துக்களைப் போலவே, திராவிட இயக்க இலக்கியத்தையும் இலட்சக்கணக்கான தமிழ் இளைஞர்கள் வாங்கிப் படித்து மகிழ்ந்தனர் என்பதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியம்!"—என ஏக்கப் பெருமூச்சு விட்டு அங்கலாய்க்கிறார்.** அறிஞர் பிரான்.

நல்ல சிருஷ்டி கர்த்தா என அவராலேயே மதிக்கப்படுகின்ற அமரர் 'கல்வி'யவர்களே, அண்ணாவின் 'ஓர் இரவு' நாடகத்தைப் பார்த்துவிட்டு — தமிழ் நாட்டில் இதோ ஒரு பேர்னட்சா இருக்கிறார்; கிப்சனும் இருக்கிறார்; இன்னும் 'கால்ஸ்வோர்த்தி'யும்கூட இருக்கிறார் —என பாராட்டியதை திருவாளர் அறியமாட்டார் போலும்.

மாற்று முகாமான காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தராக இருந்தும், திரு. 'கல்கி'யவர்கள் நடு நிலையில் நின்று விமர்சன கலைஞனுக்குரிய கோணத்தில் நின்று விமர்சித்த பெருந்தன்மை சிவசங்கரனுக்கு வராதது ஏன்? யதார்த்தவாத கண்ணோட்டக்காரர்களின் பரந்த மனப்பாங்கு போலும்!

1957-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் காஞ்சீபுரம் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகரை அண்ணா அவர்கள் தோற்கடித்த போது, 'வருக அண்ணாத்துரை' என தலைப்பிட்டு ஆனந்தவிகடன் ஒரு துணைத்தலையங்கம் தீட்டியபோது, **"புதியதோர் இலக்கிய சமுதாயத்தையே சிருஷ்டித்த பெருமைக்குரிய மனிதர் அண்ணாத்துரை"** என்று பெருமையோடும், பெருந்தன்மையோடும் குறிப்பிட்டு மகிழ்ந்ததை எல்லோரும் அறிவரே!

அண்ணாவும் அவரது தம்பிமார்களும் நச்சு இலக்கியத்தை படைத்தனர் என்று விமர்சித்து மகிழும் மகாமேதையே! ஆனந்த விகடனின் பெருந்தன்மையை பார்த்தாவது திருந்திக்கொள்ளக் கூடாதா? புரியாத தத்துவத்தின் புதிருக்குள் புகலிடம் தேடிக் கொள்ளும் பொதுவுடமையரே! காழ்ப்புணர்ச்சி உமது கண்ணை மறைத்துவிட்டதா?

இன்றைய அரசியலில் அண்ணாவின்மீது கண்ணதாசனுக்கிருக்கின்ற கசப்பும், குரோதமும் நாடறியும் என்றாலும்—கடந்த ஜூலை 16-ம் நாள் ஒய். எம். ஐ. எ. பேரவை சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. கண்ணதாசன், **தமிழில் மறுமலர்ச்சி உண்டாக்கியவர் திரு அண்ணாத்துரையே......அவர் ஒரு புதிய மரபையே தோற்றுவித்தவர் இதை எவரும் மறுக்க முடியாது ...அவருடைய நடை புதிய பாணி... இன்றைய எழுத்துலகில் கிட்டத்தட்ட பாதிக்குமேல் அண்ணாத்துரை தமிழின் சாயல்களே என்பதை மூடி மறைக்க வேண்டியதில்லை**—என குறிப்பிட்டுள்ளது காணீர்!

பார்ப்பன—பனியா ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதாகக் கூறிக் கொண்டும் புராணமத மடமையினின்று மக்களை விடுவிப்பதாகக் கூறிக்கொண்டும், ஆரிய ஆதிக்கத்திலிருந்து திராவிடக் கலாச்சாரத்தை மீட்பதாகக் கூறிக் கொண்டும், இந்த அறிஞர்—கலைஞர் கூட்டம் சிருஷ்டித்த இலக்கியங்கள் அனைத்தும் நச்சு இலக்கியங்களே!—இப்படிக் கூறி எதிரியை தாக்குவதின் மூலம் தனது அற்ப ஆசையை நிறைவேற்றிக் கொண்டுள்ளார் முற்போக்குக் கூடாரத்தைச் சேர்ந்த சிவசங்கர பெருமான்.

அறிஞர்—கலைஞர் கூட்டம், நச்சு இலக்கியம் போன்ற சொற்களை தன் வாயிலிருந்து உதிர்த்துள்ள யாதார்தவாத கூடாரத் தோழரின் பேச்சில் அங்கலாய்ப்பும், அசியையும்தான் மிஞ்சியுள்ளது என்பதையும் விமர்சனம் சரியான முறையில் செய்யப்படவில்லை என்பதையும் நாடறியும் நல்லவர் அறிவர். அந்தோ சிவசங்கரன்!

தமிழ் இலக்கியங்களை விமர்சனம் செய்ய புறப்பட்ட பெரிய மனிதரே! உமது கூற்றுப்படி "புராண இதிகாச மடமையினின்றும் ஆரிய கலாச்சாரத்திலிருந்தும் மீட்க அண்ணா இயற்றிய இலக்கியங்கள் அனைத்தும் நச்சு இலக்கியங்களே" ஒப்புக்கொள்கிறோம். ஆம்; முற்போக்கு அணி என்று கூறிக்கொண்டு—புரோகிதத் திருமணம், கோவில் வழிபாடு, பெயருக்கு பின்னால் ஜாதியின் பட்டப்பெயரைப் போட்டுக் கொள்ளுதல் போன்ற பத்தாம் பசலி கொள்கைகளைக் கடைபிடிப்பதை விடாமல் வைத்துக் கொண்டு, மக்களை ஏமாற்றித் திரிந்த உங்களை, அண்ணாவின் அறிவு நூல்கள் இனங்கண்டு கொள்ளச் செய்ததும், அதன் மூலமாக உங்கள் செல்வாக்கு மக்களிடையில் குறைந்து அழியத்தொடங்கியதும் உண்மை தான். எனவே உங்கள் அழிவுக்கு அண்ணாவின் நூல்கள் நஞ்சாக மாறிவிட்டது—உண்மைக்கு மாறுபட்டதல்லதான்.

அண்ணாவும் அவரது தம்பிமார்களும் மட்டும், மறுமலர்ச்சி இலக்கிய கர்த்தாக்கள் அல்லவாம் — ஆனால், ரகுநாதனும் ஜெயகாந்தனும் மட்டும் அந்தப் பட்டியலில் இடம் பெற்ற சிருஷ்டி கர்த்தாக்களாம். என்னே பொதுவுடமையரின் தற்குறித்தனம். அண்ணாவின் எழுத்தில் மட்டும் இனக்கவர்ச்சி மிளிருகிறது என்று கூறுகிற குணவானே! உமது வாதத்தைத் தகர்த்தெறிந்து விட்டாரே உங்கள் கூடாரத்தைச் சேர்ந்த, உம்மால் பாராட்டப் பட்ட ஒரு மனிதர்.

**கலையிலே பாலுணர்வை நீக்கி விட்டால் அது கலையாகப் பரிணமிக்க முடியாது என்பது என் எண்ணம். ஆகையால் பால் உணர்வை தவருக்க கந்த முடியாது என,** ஜெயகாந்தன் கரூர் ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஊழியர் மனமகிழ் மன்றத்தில் பேசிய போது கூறியுள்ளாரே அதற்கு என்ன சொல்லுகிறீர்?

அண்ணாதுரை, பார்வதி பி.ஏ. கலிங்கராணி போன்ற தொடர் கதைகளை திராவிட நாட்டில் எழுதி இளைஞர்களின் நரம்புக்கு முறுக்கேற்றினார் இதயத்திலே காமரசம் வழிந்தோடச் செய்தார் —இப்படிக் கூறி அண்ணாவின் எழுத்தை தாக்குகின்ற பெருமகனே—எதிர்வீட்டு ஜன்னலை எட்டிப் பார்க்கின்ற ஏந்தலே உமது கூடாரத்தைச் சற்றுத் திரும்பிப் பார்ப்பீர்!

'ஒரு பிடிச் சோறு' 'அடல்ஸ் ஒன்லி', போன்ற சிறு கதைகளில் ஜெயகாந்தன் கையாண்டுள்ள மொழிகள், வார்த்தைகள் எந்த இனத்தைச் சேர்ந்தவை? அவைகள் ஆபாசமில்லையா? எல்லாவற்றிற்கும் கிரகம் வைத்தாற்போல், அண்மையில் 'முன்னணி' இதழில் 'படுகுழி' என்ற தொடர் கதை எழுதினாரே அதை படித்தீரா?

ஒருவனுக்கு ஒருத்தி என்ற நியதியை—தகர்த்தெறிந்து அலிப் பிறவியை வைத்துக் கொண்டு

ஒருவன் வாழ்க்கை நடத்தினுன் என்பதையும் ஒரு அலிப் பிறவிக்காக பல குண்டர்கள் போட்டி இட்டனர் என்பதையும், ஆபாசமான நிகழ்ச்சிகளையும் சொற்களையும் கையாண்டு எழுதியுள்ள அந்த நெடுங் கதையை படித்த வாசகர்களும், எழுத்தாளர்களும் இது ஒரு இலக்கியமா? என சீறி எழுந்தனரே! அதன் விளைவாக 'தமிழ் சினிமா' என்ற பத்திரிகையில் வீரவேல் என்ற நண்பர் 'படுகுழி'யின் ஆபாசத்தை விளக்கி ஒரு நீண்ட கட்டுரை எழுதி தரம் பிரித்துக் காட்டியதை நாடு அறியுமே!

அண்ணுவின் 'ரோமாபுரி ராணிகள்' ஒரு ஆபாச இலக்கியம் என்றும், அதில் காமரசம் ததும்புகிறது என்றும் கூறி பெருமைப் படும் பொதுவுடமை முகாமை சேர்ந்தவருக்கு, 'படுகுழி'யில் புரண்டோடும் காமரசத்தின் சில துளிகள்!

சில விஷயங்களை ஒரு ஆண் பேசுவதே ஆபாசம் என்று கருதப்படுகிறது. ஒரு பெண் இருக்கையில் ஆண் அதுபோன்ற விசயங்களை பேசுவது அதைவிட ஆபாசம். இரண்டு பெண்கள் அதே விசயத்தை பேசிக் கொள்வதென்ருல் அதைவிட ஆபாசம் பக்கத்தில் ஒரு ஆண் இருக்கும் போது, பெண் அத்தகைய வார்த்தைகளை பேசுவதென்ருல் எத்தகைய ஆபாசம்?

நிலவில் குப்பத்தில் உட்கார்ந்து இரண்டு பெண்கள் பேசிக்கொள்ளுகிருர்கள். ஒருத்தி வாலிப வயதுடையவள் இன்ஞெருத்தி கிழவி. இளநங்கை கேட்கிருள் கிழவியைப் பார்த்து.

ஏன் ஆயா பவுனை (அலிப் பிறவி) எல்லா ஆம்புளையும் சுத்திக்கிட்டு திரியருங்களே என்னுத்துக்கு?

ஒரு ஆம்புளையை பொம்பளை கட்டிக்கிறது எதுக்கு—எல்லாம் அதுக்குதான். என்று பேசிக் கொள்கிருர்கள். அதை பக்கத்து குடிசையில் படுத்திருக்கும் இளமங்கையின் கணவன் விழித்துக் கொண்டு கேட்டுக் கொண்டு இருக்கிருன். இதுமட்டுமா? அலி பிறவியின் நிலைகளை விளக்கிக் கொள்கிருர்கள். அவ்விரு பெண்களும் அதுபாட்டுக்கு கிடக்கும் என்று கூறி.

இதோ இன்ஞெரு காட்சி:— பவுனை காதலித்து அந்த அலிப் பிறவியை அனுபவிக்கிருன் ஒரு இளைஞன். தன்னுடைய சகாக்களும் அனுபவிக்க வேண்டும் என்பதற்காக, நயவஞ்சகமாக ஒரு மண்டபத்துக்கு அழைத்துச் செல்லுகிருன், அங்கே — குண்டர்கள் முன்னேற்பாடாக இருப்பது கண்டு அஞ்சி மிரள்கிருன் அலிப்பிறவி, ஆனுல் குண்டர்களோ விடவில்லை.

அவனை பலாத்காரம் செய்கின்றனர். அந்தக் கூட்டத்தின் தலைவன் இருட்டுப் பகுதிக்கு அழைத்துச் சென்று முரட்டுத் தனம் செய்கிருன்.

**பவுன் சுற்றி இருக்கும் மேலாடை இழுக்கப்படுகிறது. ஜாக்கெட் கலையப்படுகிறது. அவன் இடையில் சுற்றியிருந்த துணி ஒரு மூலையில் போய் விழுகிறது. பிறகு ஒருவித முனகல் சத்தம் கேட்கிறது.**

தலைவன் அனுபவித்து விட்ட பிறகு ஒவ்வொருவராக அனுபவிக்கத் தொடங்குகிருர்கள். பவுனுல் தாங்கமுடியாத நிலையில் அவர்களிடமிருந்து தப்பி ஓடுகிருன். எப்படி? ஆடையின்றி நிர்வாணமாக—அலியை விரட்டிக் கொண்டு ஓடுகிருர்கள் குண்டர்கள், பாவா, என்பவரின் குறுக்கீட்டால் பவுன் காப்பாற்றப் படுகிருன்.

இந்தக் காட்சிகளை யெல்லாம் விட மிகவும் அருவருக்கத்தக்க— எவருடைய பேனுவும் எழுதத் துணியாத காட்சியை, ஜெயகாந்தன் துணிச்சலுடன் அந்த ஆபாச நிகழ்ச்சியை சித்தரித்துக் காட்டியுள்ளார்.

தனது குடிசையின் முன்னுல் உள்ள திடலின் புதருக்குப் பக்கத்தில் மலம் கழித்துக் கொண்டிருக்கிற ஒருவனை, தனது குடிசையினுடைய கீற்றடைப்பைப் பொத்துக் கொண்டு பவுனு பார்க்கிருன்.

அங்கே-—

**மலம் கழித்துக் கொண்டிருக்கிற அவன் தனது சுய தேவையை பூர்த்தி செய்துக் கொண்டு இருக்கிருன்.** எப்படி? இலக்கிய ரசனையும் காட்சியும்!

இதைப் பார்த்த பவுனின் உடல் புல்லரிக்கிறது மின்சக்திபோன்று. உடலெல்லாம் காந்துகிறது. அவன் நினைக்கிருன். **இப்படி தானே சுயதேவையை பூர்த்தி செய்துகொள்ள வேண்டியதில்லையே! இதற்கு நம்மை பயன் படுத்திக் கொள்ளலாமே** — என்று நினைக்கிருன். இதுபோன்று ஆசாபாசத்தின் சிகரத்திற்கே போய் தமிழையும், தமிழ் கலாச்சாரத்தையும் அசிங்கப்படுத்தி விட்டு, நச்சு இலக்கியம் படைத்தவர்கள் என்று வாய் கூசாமல் வேறு அண்ணுவையும் அவரது தம்பிகளையும் பழி தூற்றுகிறீர்கள்.

'படு குழி' போன்ற ஆபாச இலக்கியத்தைப் படைத்து, இளைஞர்களுக்கு வெறியுணர்ச்சியை ஊட்டி படுகுழியில் விழச் செய்தது யார்? நீங்களா? அல்லது அண்ணுவும் அவரது தம்பிமார்களுமா? நெஞ்சில் கை வைத்துச் சொல்லுங்கள்.

ஆபாசத்தின் உச்ச கட்டத்துக்கே போய் தரக்குறைவான 'படுகுழி' போன்ற இலக்கியம் படைத்தவர் மட்டும் மறுமலர்ச்சி எழுத்தாளர். ஆனுல் 'ரோமா புரி ராணிகள்' எழுதிய அண்ணுவோ நச்சு இலக்கியம் படைத்தவர் அப்படித்தானே? என்னே உமது இலக்கிய விமர்சனம்.

அண்ணுவின் ரோமாபுரி ராணிகள் போன்ற படைப்புக்களில் எங்காவது வரம்பு மீறி 'அண்ணு, அவர்கள் தேவையற்ற படுகுழி போன்று படிப்பதற்கே கூசுகின்ற ஆபாசத்தை கையாண்டிருக்கிருர்களா? எங்கே நிரூபிக்க முடியுமா? எந்த ஒரு இலக்கியமும் படைக்கப்பட்ட பத்தாண்டுகளுக்குப் பிறகும் விமர்சிக்கப்பட்டுகிறது என்ருல் அது நசிவு இலக்கியமில்லை என்பது கண்கூடு. வெறும் இனக் கவர்ச்சி மட்டுமுள்ள நூல் இவ்வளவு நாள் நீடித்திருக்க முடியாது. அதையும் மீறி அதில் ஏதோ ஒன்று உள்ளது என்பதை காலத்தின் வளர்ச்சிக் காட்டத் தான் செய்கிறது!

இப்பொழுதாவது நச்சு இலக்கியம் எது நசிவு இலக்கியம் எது என்பதை உணர்வீர்! இனிமேலாவது தான் தோன்றித் தனமாக பேசாமல் பொறுப்புணர்ச்சியோடு பேசக் கற்றுக் கொள்வீர்! இல்லாவிட்டால் அண்ணு சிருஷ்டித்த புதிய இலக்சிய சமுதாயத்தின் வாரிசுகள் உமக்கு புத்தி புகட்டத் தவற மாட்டார்கள் என்பதை அறிவுறுத்துகிருேம். ○



## வேருக நாடு போகும்!

——(0)——

நேருவே மேரு என்று
    நாடெலாம் போற்று வேளை.
நேருவே மீற லாமோ!
    நீரலித்த வாக்கு தன்னை!
வேறுயார் எமக்கு உண்டு
    வேதனை போக்கு தற்கு.
சீறிவீர் சீனன் ஓட
    சிந்தை நாம் மகிழ்ந்து நின்ருேம்.

கோழையாய் இன்று உம்மைக்
    காணவே சகிக்க வில்லை
தாழ்மையாய் கூறும் எங்கள்
    தலைவர்கள் வார்த்தை தம்மை
வீழ்ச்சியை நோக்கி ஓடும்
    வீரரே கேட்டுக் கொள்வீர்
சூழ்ச்சியைப் புரிந்து கொண்டோம்
    சொல்லாசை எமக்கு வேண்டாம்.

ஆங்கில இடத்தை நாடி
    அறிவிலா இந்தி ஏனே?
தூங்கிய மக்க ளெல்லாம்
    துடிதுடித் தெழுந்து விட்டார்.
வேங்கையைத் தூண்டி விட்டு
    வேடிக்கை பார்க்க லாமோ?
ஓங்கிய உமது புகழை
    ஒழித்ததே இந்திக் கூட்டம்.

நரிக்குணம் கொண்ட இந்தி
    வெறியரின் கையில் சிக்கி
பறிக்கிறீர் எமது வாழ்வைப்
    பண்புள்ளோர் செய்கை ஈதா?
முறைக்கிறீர் நீதி கேட்டால்
    மழுப்புதல் ஏனோ ஐயா?
வெறிக்குண ஆதிக் கத்தால்
    வேருக நாடு போகும்!

**களா மாறன்** B. Sc.



# அண்ணாவுடன் நான்



## 18

அன்றைய கவர்னர் ஜெனரல் ஆச்சாரியார் அவர்களும், பெரியார் அவர்களும் திருவண்ணாமலையில் சந்தித்துப் பேசியதையொட்டி திராவிட கழக முன்னணித் தோழர்களிடையே பெரும் கருத்து வேறுபாடுகள் தோன்றலாயின !

இச்சந்திப்பினால் இயக்கத்திற்கு விரைவில் ஏதோ அபாயம் ஏற்படக்கூடும் என்ற கவலை அண்ணா அவர்களிடம் வளர்ந்து வந்தது. இருவரது சந்திப்பின் உள் நோக்கம் யாருக்குமே சரிவர தெரியவில்லையாதலால் அவரவர்களின் எண்ணத்திற் கேற்றவாறு அபிப்ராயங்களும் சாதகபாதங்களும் வளர்ந்த வண்ணமாயிருந்தன.

இச்சந்தர்ப்பத்தில்தான் கோவையில் திராவிட கழக சார்பில் முத்தமிழ் மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் அண்ணா அவர்கள் கலந்து கொண்டார்கள். பெரியார்—ஆச்சாரியார். சந்திப்பைப்பற்றிய விவரத்தைக் கட்சியின் நலன் கருதி இம்மாநாட்டில் அறிவிக்குமாறு பெரியார் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்—என்று அண்ணா அவர்கள் தமது சொற்பொழிவில் குறிப்பிட்டார்கள். இதைப் பற்றிச் சென்ற இதழில் விவரித்திருந்தேன். எனவே சிலவற்றை மட்டும் சுட்டிக்காட்டித் தொடர்ந்து செல்ல விரும்புகிறேன்.

அண்ணாவின் வேண்டுகோளைப் பெரியார் ஏற்று பதில் கூறினாரில்லை. கூறாதது மட்டுமல்ல, என்னைக் கட்டுப்படுத்த கட்சியில் எவனுக்கும் யோக்கியதையில்லை. என்று ஆரம்பித்து வழக்கம் போல பொறுக்கித் 'தின்பவர்கள் என்பதுவரை பேசி முடித்தார். இதனால் மாநாட்டில் சற்று சலசலப்பு ஏற்பட்டது. பெரியார் கோஷ்டி அண்ணா கோஷ்டி என்பதாகப் பிரிந்து வெளிப்படையான விவாதங்களும் பேச்சு வார்த்தைகளும் முற்றின. அண்ணா அவர்கள் தமது சுபாவப்படி அனைத்தையும் சகித்துக் கொண்டிருந்தார். இடைவேளைக்குப்பிறகு மாநாட்டுக்கே வரவில்லை. நானும், நண்பர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்களும் அண்ணாவை வேண்டி அழைத்தோம். வர மறுத்துவிட்டார்கள். அத்துடன் அண்ணா அவர்கள் கூறினார், "நடராசன், அய்யா இன்னும் என்னென்ன தவறுகளை அதுவும் வெளிப்படையாக நடத்தப்போகிறார் பார்" என்றார். அண்ணா அவர்களை நான் மேலும் வற்புறுத்த விரும்பவில்லை. அவர் கூறியதைப்பற்றி எண்ணியெண்ணி குழம்பிப் போனேன். கோவை முத்தமிழ் மாநாடு ஒருவாறு முடிந்தது.

அதைத் தொடர்ந்து, ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி வகுப்பு நடத்துவதைப்போல அந்த ஆண்டுப் பயிற்சி வகுப்பை முத்துப்பேட்டையில் நடத்துவதென்று திட்டமிடப்பட்டிருந்தது. மாநாடு முடிந்ததும் நான் சென்னை வந்து சேர்ந்தேன். அடுத்தநாள் பயிற்சி வகுப்பு மாஹூர் சர்மா மாளிகையில் நடைபெறப் போவதாக செய்தி அறிந்தேன். எனக்குத் தூக்கிவாரிப்போட்டது.

அன்றிரவு முத்துப்பேட்டைக்குச் செல்வதாக இருந்தேன். ஆனால் இம்மாற்றத்தைக் கண்டதும், நான் பயிற்சி வகுப்புக்குச் செல்லவில்லை. **"நடராசன், இன்னும் எவ்வளவு பெரிய தவறுகளை அய்யா அவர்கள் வெளிப்படையாகச் செய்யப்போகிறார் பார்"** என்று கோவையில் அண்ணா அவர்கள் கூறிய வார்த்தைகள் என் செவிகளில் ஒலித்தன. பெரிதும் வேதனையடைந்தேன். பயிற்சி வகுப்பை நடத்திவைப்பதற்குப் பெரியார் அவர்களுக்குத் துணையாயிருக்கவேண்டிய நான் மாஹூருக்கு செல்லவில்லை.

அடுத்த நாள் பெரியார் அவர்களிடமிருந்து தந்தி வந்தது. உடனே என்னை புறப்பட்டு வருமாறு. அதற்கும் நான் செல்லவில்லை. அப்போது நான்பட்ட வேதனையைச் சொல்லிமுடியாது. பெரியார் அவர்களுடன் அண்ணா அவர்கள் பிணக்கு கொண்டு கட்சிப்பணியில் தீவிரமாக ஈடுபடாத நேரத்திலெல்லாம் அண்ணா அவர்கள்மீது என்னைப் போன்றவர்களுக்கு ஆத்திரமும் வருத்தமும் ஏற்படும். அண்ணா அவர்களை நேரில் சந்திக்கும் போதும் இதுபற்றி மனம்விட்டுப் பேசுவதுண்டு. ஆனால் அவர் ஏன் உற்சாகக் குறைவாகயிருந்து வருகிறார் என்பதும் அவ்வாறு இருப்பது நியாயந்தான் என்பதும் பெரியார் அவர்களின் தந்திக்குப் பிறகும் நான் மாஹூர் செல்ல மனமில்லாமல் குழம்பியபோது எனது மனசாட்சி எனக்கு எடுத்துக் கூறிற்று.

அடுத்த நாளும் பெரியார் அவர்களிடமிருந்து மற்றொரு தந்தியும் மாணவர் கழகத் தலைவர் தோழர். தவமணிராசன் அவர்களிடமிருந்து விரிவான மடலும் வந்தது. இரண்டு தந்திகள் தொடர்ந்தாற்போல பெரியாரிடமிருந்து வந்த பிறகு நான் போகாமலிருப்பது மரியாதைக் குறைவாகுமோ என்று அஞ்சி குழப்ப நிலையில் மாஹூர் சென்றேன். அங்கு கழக நிர்வாகத் தலைவர் திருச்சி வழக்கறிஞர் வேதாச்சலம் அவர்களும் பேராசிரியர் இலக்குவனாரும் முதல் இரண்டு நாட்கள் மாணவர்களுக்கு பயிற்சி அளித்துவந்ததை அறிந்தேன். நான் உடனே புறப்பட்டு வராததைப்பற்றி பெரியார் மிகவும் வருத்தப்பட்டார். கடிந்து கொண்டார். நானும் எனது எண்ணத்தை, சர்மா மாளிகையில் பயிற்சி வகுப்பு நடத்துவதைப் பற்றிய குறையை அவரிடம் மனமாரக் கூறினேன். என்றாலும் அதை அவர் பொருட்படுத்தவில்லை. நானும் அதேபோல ஏதோ கடமைக்கு தொடர்ந்து இரண்டு நாட்கள் அங்கு தங்கியிருந்து பயிற்சி வகுப்பு நடத்துவதில் பங்கேற்றேன்.

நாம் நடத்தும் பயிற்சியோ பகுத்தறிவு குறித்து. ஆனால் மாளிகையின் சொந்தக்காரரான திரு. சர்மா அவர்களோ தினசரி மாளிகையிலுள்ள காளிகோயிலில் மூன்றுகால பூஜையையும் தவறாது நடத்திவிட்டுப் பிறகு வைதீக கோலம் கலையாமல் பெரியார் அவர்களுடன் உட்கார்ந்து அளவளாவிப் பேசுவார். விருந்துபசாரம் நடத்துவார். திராவிட கழகத்தில் ஆண்டுதோறும் நடந்துவந்த மாணவர் பிரச்சாரப் பயிற்சி என்பதற்கு இந்த அலங்கோலத்தோடு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

மாஹூர் சர்மா மாளிகைச் சம்பவத்தைத் தொடர்ந்துதான் பெரியார் — திருமணமும் நடந்தேறியது. இத்திருமண ஏற்பாட்டை முழுக்க முழுக்க உணர்ந்திருந்த கழக நிர்வாகத் தலைவர் திரு. வேதாச்சலம் அவர்கள் கடைசி வரையில் விவரத்தை மறைத்து வைத்திருந்தார். அத்துடன் அண்ணா அவர்களின் கருத்துக்கு ஆதரவு தருவதைப் போலவும் நடந்து வந்தார். இவரது போக்கு சென்னையில் பெரியார் — திருமணம் நடக்கும்போதுதான் எங்கள் அனைவருக்கும் புரிந்தது. திரு. வேதாச்சலம் அவர்கள்மீது குறை கூற வேண்டும் என்பதற்காக இதைச் சுட்டிக் காட்டவில்லை. அவ்வளவு பக்தியுடனிருந்த அவரே இன்று பெரியார் அவர்களை விட்டுப் பிரிய நேரிட்டிருக்கிறதென்றால் நான் மேலும் விவரிப்பது முறையாகாது.

பெரியார் அவர்களுடன் அண்ணா அவர்கள் மனமாரக் கலந்து பேசி இயக்கப் பணியில் தீவிரமாக ஈடுபடவில்லையே யென்று மனச் சோர்வு கொண்டிருந்த நான் சில சமயங்களில் அண்ணா அவர்களிடம் உரிமையோடு சண்டை போடுவதுகூட உண்டு. அப்போதெல்லாம் அண்ணா சொல்லுவார். "உனக்கு

(6-ம் பக்கம் பார்க்க)

: என். வி. என். :

## மாஹூர் மாளிகையும் தி.க. பிரசார பயிற்சியும்

# அஞ்சாநெஞ்சன் பதில்!

**எஸ். அரங்கசாமி, சேலம்.**

**கே: தமிழ்நாட்டு 'முதல் மந்திரி காமராசர் அந்தப் பதவியிலிருந்து விலகி' அகில இந்திய காங்கிரஸ் தலைவராக வரப்போகிறாராமே அதனால் நாட்டுக்கு நன்மை ஏற்படுமா, ஏற்படாதா?**

ப: நரி வலம் வந்தால் நல்லதா இடம் வந்தால் நல்லதா அது எப்படியாகிலும் போகட்டும் மேலே விழுந்து கடிக்காத வரையில் பிழைத்தோம் என்றாராம் ஒருவர், அதுபோல கனம் காமராசர் இருக்கும் பதவியைத் துறக்கிறாரோ அல்லது புதிய பதவிக்குத் தாவுகிறாரோ எப்படியோ போகட்டும். ஆளுங்கட்சி இப்போது செய்துள்ள அநீதிகளோடாவது நிறுத்திக்கொண்டு மிச்சமுள்ள மூன்றரை ஆண்டுகளில் ஓரளவாவது மனிதாபிமானத்தோடு ஆட்சி செய்தால் போதும்.

ஃ

**வி. எஸ். தேவசகாயம், வேலூர்.**

**கே: காமராசர் பதவியிலிருந்து விலகிச் செல்லத் துடிப்பதேன்?**

ப: தி. மு. கழகத்திடம் சென்ற பொதுத் தேர்தலிலும் தொடர்ந்து திருச்செங்கோடு—திருவண்ணாமலை இடைத் தேர்தலிலும் பெற்ற தோல்விகளின் எதிரொலிதான் காமராசர் பதவித் துறவுப் பேச்சும்!

ஃ

**சி. டி. ராஜேந்திரன், கோவை.**

**கே: அரசியலில் தொடர்பு கொள்ளாத தமிழ் நடிகர்கள் யார்?**

ப: அப்படி யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. கழகத்தைச் சார்ந்த நடிகர்கள் வெளிப்படையாக தங்கள் அரசியல் கட்சியின் கொள்கைக்காகப் பணியாற்றி வருகின்றனர். ஆனால் மற்ற கட்சிகளிடம் தொடர்பு கொண்டுள்ள நடிகர்கள், கலைத்துறையில் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள் என்று கூறிக்கொண்டே திரை மறைவில் அந்தந்த கட்சிகளுக்குத் துதி பாடி வருகின்றனர்.

ஃ

**வி. எம். தசரதன், வேலூர்.**

**கே. டாக்டர்கள் என்ற சிறப்புப் பட்டங்களை அதிகமாக பெற்றிருப்பது டாக்டர் எ. இராமசாமி அவர்களா அல்லது அவரது தம்பி டாக்டர் எ. இலட்சுமணசாமி அவர்களா?**

ப: டாக்டர் எ. இலட்சுமணசாமி அவர்கள்தான்.

**டி. எஸ். மகாதேவன், தஞ்சை.**

**கே: சென்ற இடைத்தேர்தலில் கூட காங்கிரஸ் கட்சியையும் அதன் நடவடிக்கைகளையும் ஆதரித்துப் பிரச்சாரம் செய்த கம்யூனிஸ்டு கட்சி இப்போது நேரு மீதும், அவரது சர்க்கார் மீதும் நம்பிக்கையில்லை யென்று தீர்மானம் கொண்டு வர முனைந்திருக்கிறதே இதுபற்றி உங்கள் அபிப்ராயம் என்ன?**

ப: நம் நாட்டு கம்யூனிஸ்டு கட்சி தனது சொந்த புத்தியையும் சுயமரியாதையையும் அடியோடு இழந்துவிட்டதென்ற பரிதாப நிலையை அவர்களது போக்கு படம் பிடித்துக் காட்டுகிறது.

ஃ

**மா. வே. மணிவண்ணன், வடசென்னை**

**கே: அடுத்து நடைபெறயிருக்கும் பாராளுமன்றக் கூட்டத்தில் கிருபளானி, லோகியா ஆகியோர் கலந்துகொள்ளப் போகிறார்களே, எப்படியிருக்கும்?**

ப: பாராளுமன்றம் குஸ்தி மேடையாகிவிடுமென்று எண்ணுகிறீர்களா? அப்படி ஒன்றும் நடக்காது.

ஃ

**வி. கே. ரகுராமன், வேலூர்.**

**கே: சம்பத் கட்சி இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறது?**

ப: இன்னும் ஏதாவது இடைத் தேர்தல் வராதா என்று ஏங்கிக் கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

## வல்லரசுகள் உடன்பாடு!

——(0)——

அணு ஆயுத சோதனைத் தடை சம்பந்தமாக ரஷியா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய வல்லரசுகளுக்கிடையே ஏற்பட்டுள்ள உடன்பாட்டை, உலக சமாதானத்தையும் உலகநாடுகளின் நல்லுறவையும் விரும்பும் அனைவரும் மனதார வரவேற்பர் என்பதில் ஐயமில்லை. இந்த உடன்பாட்டினால் இனி உலக நாடுகளிடையே குறிப்பாக வல்லரசுகளுக்கிடையே சண்டை சச்சரவு என்பது அறவே இல்லாமல், எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிட்டதாக நாம் கூறமுடியாது.

ஆனாலும் இந்த மூன்று வல்லரசுகளும் இப்போது ஏற்பட்டுள்ள உடன்பாட்டினை முதற்படியாகக்கொண்டு, தங்கள் தங்கள் வரட்டு ஜம்பங்களையும், வீம்பையும் விட்டுக்கொடுத்துத் தொடர்ந்து மனம் விட்டு விவாதித்து அதற்கேற்ப முடிவுகளை எடுப்பார்களானால் போர் அச்சத்தின் காரணமாக கோடிக்கணக்கான பணம் விரையமாக்கப்பட்டு வருவதைத் தடுத்து, அந்தப்பணம் அனைத்தும் உலக மக்களின் நல்வாழ்வுக்கான திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட முடியும்.

வெளிப்படையாகச் சொல்லவேண்டுமானால் வல்லரசுகளின் விருப்பு வெறுப்புக்கேற்பவே மற்ற நாடுகள் போர் விவகாரங்களில் சிக்கி அநியாயமாக பாதிக்கப்படுகின்றன. உலகில் வளர்ந்துவரும் மக்கள் எண்ணிக்கையைப் பார்த்தால் சின்னஞ்சிறிய நாடுகளிலிருந்து வசதியற்ற பெரிய நாடுகள்வரை மக்களின் ஆக்கப்பணிக்குச் செலவிடவேண்டிய பணத்தையெல்லாம் போர் அபாயத் தடுப்புக்காகச் செலவிடவேண்டிய அவலநிலைக்கு ஆளாகித் தவிக்கின்றன.

எனவே அணு ஆயுதத் தடையில் ஏற்பட்டுள்ள உடன்பாடு, உலக நாடுகள் அனைத்தும் இதயபூர்வமான தோழமையுடன் வாழ்ந்துவருவதற்கு வழிகாட்டும்வகையில் வெற்றியுற வேண்டுமென்று மனமார ஆசைப்படுகிறோம்.

அணு ஆயுதத் தடையைப்பற்றி தி. மு. கழகம் தனது பொதுக்குழுவில் நிறைவேற்றியிருக்கும் தீர்மானத்திற்கும், கழகத்தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் விடுத்திருந்த வேண்டுகோளுக்கும் ஏற்ப ரஷிய—அமெரிக்க—பிரிட்டன் ஆகிய வல்லரசுகளும் அதன் பிரதிநிதிகளும் விரிந்த மனப்பான்மையுடன் நடந்துகொண்டு, உலக மக்களுக்கு ஓரளவு ஆறுதல் அளித்துள்ளமைக்கு அவர்களை இதயபூர்வமாகப் பாராட்டுகிறோம்.

**5-ம் பக்கத் தொடர்ச்சி**

இப்போது என்ன சொன்னாலும் புரியாது. என் மீதுதான் நீயும் மற்றவர்களும் ஆத்திரப் படுவீர்கள். என் மீதும் நான் கட்சிப் பணியில் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்பதில் இதயபூர்வமான ஆசையும் நம்பிக்கையும் வைத்துள்ள நீயும் மற்ற தோழர்களும் இப்படித்தான் வருத்தப்படுவீர்கள். காலம்தான் உங்கள் மயக்கத்தைப் போக்கி எனது நிலை சரியானது என்பதை உணர்த்தும்" என்று அமைதியாக சிரித்துக்கொண்டே கூறுவார். என்றாலும் எனக்கு அவரது பதில் திருப்தியளிக்காது.

அந்த மயக்கம் சர்மா மாளிகையில் நடைபெற்ற பிரச்சார பயிற்சி வகுப்பு சம்பவத்தால் ஓரளவு நீங்கிற்று. மேலும் என் போன்றவர்களைச் சிந்திக்க வைத்தது. அந்தச் சிந்தனையும் கவலையும்தான், பெரியார் அவர்களை விட்டு நடராசன் எந்தக் காலத்திலும் பிரியமாட்டான் என்று அண்ணா அவர்கள் திட்ட வட்டமாக எண்ணியிருந்த முடிவையும் மாற்றி அண்ணா அவர்களே ஆச்சரியப்படும் வகையில், பெரியார் அவர்களை விட்டுப் பிரிந்து தி. மு. கழகத்தை நிலவிய பணியிலும் அறிஞர் அண்ணா அவர்களுக்குத் துணையாய் இருக்கவும் தொடர்ந்து தொண்டாற்றி வரும் வாய்ப்பினையும் அளித்தது. நான் மட்டுமா என்னைப் போன்று ஏராளமான தோழர்கள் தெளிவு பெற்றனர் என்று கூறின் மிகையாகாது.

அறிஞர் அண்ணா அவர்களிடம் இயற்கையாக அமையப்பெற்று வளர்ந்து வரும் இந்த அரசியல் விவேகம்தான், திராவிட இயக்கமும். அதன் மாபெருந்தலைவர்களும் கண்ட கொள்கை பலவித பேராபத்துக்களைத் தாண்டி மேலும் இன்னும் ஒழுங்குற அமைந்து இன்று தென்னகத்தின் — தமிழகத்தின் அசைக்க முடியாத மகத்தான சக்தியாக விளங்கி வருகிறது. அச்சக்தி மேலும் வளரவும், அதன் வாயிலாக நமது இயக்கக் கொள்கை வெற்றி பெறவும், நாமெல்லாம் தூய்மையான தோழமை உணர்வுடன் கடமையாற்ற முனைவோமாக!

(தொடரும்-அடுத்த வாரம்)

### ஏஜெண்டுத் தோழர்களுக்கு

○

வணக்கம்,

ஜூலை மாதம் முடிய பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. உடன் அதற்கான தொகையை தவறாது அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

நிர்வாகி: 'திராவிடன்'